Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk
www.tamilmirror.lk
தமிழ் Mirror
MONDAY, SEPTEMBER 02, 2024
திங்கட்கிழமை செப்டெம்பர் 02, 2024 | ஒளி: 10 கதிர் 041 | பக்கம்:08 | நகரப்பதிப்பு
FREE



இலங்கைத் தமிழரசுக் கட்சி

# சஜித்துக்கு ஆதரவு



**தமிழ் பொது வேட்பாளராக அரியநேந்திரன், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதால் அதிலிருந்து அவர் விலக வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது**

*க.அகரன்*

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு தெரிவிக்க, இலங்கை தமிழரசுக் கட்சி, ஞாயிற்றுக்கிழமை (01) தீர்மானித்தது.

வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டம், ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை எம்.எ.சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2



## நல்லூர் தேர்

இலங்கையின் வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர் உற்சவம், ஞாயிற்றுக்கிழமை (01) வெகு சிறப்பாக இடம்பெற்றது. தீர்த்தத் திருவிழா இன்று திங்கட்கிழமை (02) இடம்பெறும்.

புகஜிந்தன்

ஒரே குடையின் கீழ் ஒன்றிணைந்து

## “சங்காய் ஒலிப்போம்”


*ஏ.எச்.ஹஸ்பர்*



அனைத்து தமிழ் கட்சிகளையும், சிவில் அமைப்புக்களையும் சங்கு சின்னத்தின் ஊடாக ஒரே குடையின் கீழ் ஒன்றிணைத்து மக்களுக்குப் பலமான செய்தியைச் சொல்ல வேண்டும் என தெரிவித்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அந்த பலத்தைத் தமிழ்த் தேசியத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை, பொது வேட்பாளர் அரியநேந்திரனுக்கு ஆதரவளித்து சங்கு சின்னத்துக்கு

தொடர்ச்சி P2



## கம்பி வலையில் சிக்கி பெண் சிறுத்தை பலி

**பல மிருகங்கள் இறுதி நேரத்தில் மரணித்து விட்டன**

சுமார் பத்து வயது மதிக்கத்தக்க பெண் சிறுத்தை ஒன்று கம்பி வலையில் சிக்கி பரிதாபமாக மரணமடைந்த சம்பவமொன்று மஸ்கெலியா மவுசாகல லக்கம் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

தகவலறிந்து ஸ்தலத்துக்கு விரைந்த நல்லத்தண்ணி வனத் துறையினர், மரணமடைந்த அந்த சிறுத்தையின் உடலை மீட்டு, ரந்தெனிகல மிருக வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

வலையில் சிக்கி, உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த சிறுத்தையைக் கண்ட மக்கள், அது தொடர்பில் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இதுதொடர்பில், நல்லத்தண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

தொடர்ச்சி P2

## “எரிவாயு விலையில் மாற்றம் இல்லை”




உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்த போதிலும், லிட்றோ விலை அதிகரிக்கப்படாது என லிட்றோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## குதிரைகள் மூலம் தேர்தல் பிரசாரம்

*பாறுக் ஷிஹான்*

கொழும்பில் இருந்து இரண்டு உயர் ரக வெள்ளைக் குதிரைகள் தற்போது அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரதான வீதிகளில் உலா வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்துக் குறித்த குதிரைகள் தினமும் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளன.

மேலும் ரணில் விக்ரமசிங்கவின் பிரசார கூட்டங்கள் இடம்பெறுகின்ற இடங்களை மையப்படுத்திக் குறித்த இரு குதிரைகளும் காட்சிப்படுத்தப்பட்டு வருவதுடன் வித்தியாசமான முறையில் மக்களிடம் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக

தொடர்ச்சி P2




## “தமிழர்கள் விடுதலைக்கு ஒன்றுபட வேண்டும்”

**பதவி மோகத்தால் ஆளுக்கொரு அறிக்கை விடுவதை மறுக்கின்றேன்**

*வ.சக்தி*

தமிழ் மக்கள் விடுதலை அடைய வேண்டுமாக இருந்தால் அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஆளுக்கு ஒருபக்கம் இருந்து பிரிவதால் எந்தப் பலனும் பெறுவாரில்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான

தொடர்ச்சி P2

## வெளிப்படைத்தன்மையை இழக்கிறது அரசாங்கம்

**மோசடிகள் மற்றும் ஊழல்களைக் குறைப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியம்**

நாட்டின் பாரியளவான உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டங்களின் கொள் முதல் விபரங்கள், பொதுமக்களால் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உட்கட்டமைப்பு கருத்திட்ட கண்காணிப்பான் இணையத்தளத்தின் 2024க்கான புதுப்பித்தலின்படி மேற்பட விவரம் வெளியானது.

2024ஆம் ஆண்டளவில், இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் 50 பாரியளவான உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் இத்தளத்தின் கீழ் ஆராயப்பட்டுள்ளன. இவற்றில், 21 திட்டங்களுக்கு உள்நாட்டுக் கடன் மற்றும்

தொடர்ச்சி P2

## ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்தது



### பியகமவில்...



தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திசாநாயக்க பியகமவில் சனிக்கிழமை(31) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றார்.



### காத்தான்குடியில்...



சுயேச்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், காத்தான்குடியில் சனிக்கிழமை (31) பிரசாரம் நடைபெற்றது.



### யாழ்ப்பாணத்தில்...

*பு.கஜிந்தன்*

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாசவை ஆதரித்து யாழ்ப்பாணம்-துணவி பகுதியில் சனிக்கிழமை (31) தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# சஜித்துக்கு ஆதரவு

இதன் பிரகாரம் இன்றைய கூட்டத்தில் அரியநேந்திரனுக்கு ஆதரவு அளிப்பதில்லை என்றும் தமது கட்சியைச் சேர்ந்த அரியநேந்திரன், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுவதன் காரணமாக அதிலிருந்து அவர் விலக வேண்டும் என்றும் தீர்மானித்ததோடு, இலங்கை தமிழரசுக் கட்சி, சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்குத் தீர்மானித்து மூன்று தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது என்றார்.

## கம்பி வலையில் சிக்கி பெண் சிறுத்தை பலி

வன பாதுகாப்பு அதிகாரிகள் ஸ்தலத்துக்கு சென்று, அந்த சிறுத்தையை உயிருடன் மீட்க முயற்சித்தனர்.

எனினும், அம்முயற்சி பயனளிக்கவில்லை.

ஹட்டன், மஸ்கெலியா மற்றும் பொகவந்தலாவ மிருக வைத்திய அதிகாரி ஒருவர் பகுதியில் கடந்த சில வருடங்களாக இல்லை. இந்நிலையில், கம்பளை அல்லது கண்டியில் இருந்தே மிருக வைத்திய அதிகாரி வரவேண்டியுள்ளது. அவர் வருவதற்கு முன்னர், பல மிருகங்கள் இறுதி நேரத்தில் மரணித்துவிட்டன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குதிரைகள் மூலம் தேர்தல் பிரசாரம்

பிரசாரம் செய்து வருகின்றனர். சம்மாந்துறைப் பகுதியில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்திற்கு முன்னர் கூட்ட அழைப்பிற்காகக் குதிரைகளை ஏற்பாட்டாளர்கள் காட்சிப் பொருளாகப் பயன்படுத்தி மக்களைக் கவர்ந்திழுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ்வின் தேசிய காங்கிரஸ் கட்சியின் சின்னம் குதிரை என்பதுடன் இம்முறை இடம்பெறும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை அவர் ஆதரிப்பதும் குறிப்பிடத்தக்கது.

## வெளிப்படைத்தன்மையை இழக்கிறது அரசாங்கம்

மானியங்கள் மூலம் நிதியளிக்கப்படுவதோடு, 29 திட்டங்களுக்கு வெளிநாட்டுக் கடன் மற்றும் மானியங்கள் வாயிலாக நிதியளிக்கப்படுகின்றன. இத் திட்டங்களின் மொத்த மதிப்பு ரூபாய் 1.01 டிரில்லியன் ஆகும்.

2016ஆம் ஆண்டின் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 9ஆம் பிரிவின்படி, ஒரு கருத்திட்டம் தொடர்பான தகவல்கள் ஐந்து வகைகளின் கீழ், பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். கருத்திட்ட விபரங்கள், நோக்கங்கள் மற்றும் பயனாளிகள், வரவு செலவுத்திட்டம் மற்றும் நிதி விபரங்கள், கருத்திட்ட ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகள், கருத்திட்ட கொள் முதல் மற்றும் ஒப்பந்தங்கள் போன்றவையே அவ்வைந்து வகைகளுமாகும்.

இவ்வகைகளின் கீழ், பொது மக்களுக்கான தகவல் வெளிப்பாடு வெறும் 36% சதவீதம் எனும் குறைவான அளவிலேயே காணப்படுவதாக வெரிட்டே ரிசர்ச் இன் ஆய்வு முடிவுகள் குறிப்பிடுகின்றன. கொள் முதல் தொடர்பான தகவல்களை மட்டும் கருத்திற்கொண்டால், -ஒரு கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒப்பந்தக்காரர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர், நிதியுதவியைப் பெறுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் எவை போன்ற தகவல்களில் வெறும் 21% மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆய்வில் மேலும் கண்டறியப்பட்டுள்ளது.

தகவல்களை வெளிப்படுத்தாமல் இருப்பது மோசடி மற்றும் ஊழலுக்கு வழிவகுப்பதோடு, குறிப்பாக அதிகப்பணம் புழங்கும் கொள் முதல் செயற்பாடுகளில் இடம்பெறும் இவ்வாறான முறைகேடுகள் நாட்டின் பொருளாதாரத்தில் நேரடியான, குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கையின் பொருளாதாரத்தைச் சரியான பாதையில் கொண்டுசெல்ல வேண்டுமாயின் கொள் முதல் செயற்பாடுகளில் இடம்பெறும் மோசடிகள் மற்றும் ஊழல்களைக் குறைப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியம் என சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவை சுட்டிக்காட்டியுள்ளன. இதற்கான முக்கிய நடவடிக்கையாக அமைவது, கொள்முதல் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதாகும்.

பல ஆண்டுகளாக, அரசியல் தலைவர்கள் மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதாக பல்வேறுபட்ட வாக்குறுதிகளை வழங்கியிருந்த போதிலும், கருத்திட்டங்கள் தொடர்பான கொள் முதல் தகவல்களையாவது இலங்கையால் இன்னும் ஒழுங்கான முறையில் வெளியிட முடியாமல் இருப்பது, அவ்வாறு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் சரியாக நிறைவேற்றப்பட வில்லை என்பதைக் குறித்துக்காட்டுகிறது.

2024 ஜனாதிபதித் தேர்தல் மேடைகளிலிருந்து இதுவரை அறிவிக்கப்பட்ட சில கொள்கை அறிக்கைகளும் மோசடி மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்துவதாகப் பல வாக்குறுதிகளை அளித்துள்ளன. அதிகாரத்திற்கு வந்த பிறகு, குறைந்த பட்சம் தகவலறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்றவாறு, கருத்திட்டங்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் முன்கூட்டியே பகிரங்கப்படுத்தப்படுமானால், அதுவே ஜனாதிபதித் தேர்தல் மேடையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் உண்மையான நிறைவேற்றமாகக் கருதப்படும்.

இந்த நோக்கத்திற்காக, வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்களை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களும் ஆதரவளிப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்கள் மூலம் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்களுக்கான கொள் முதல் தகவல்களை வெளியிடுவது தற்போது மிகவும் குறைவாக இருப்பதால், நாட்டின் தகவலறியும் உரிமைச் சட்டத்திற்கு அமைவாகத் திட்டத் தகவல்களைப் பகிரங்கமாக வெளியிடுவதற்கு இந்த நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்திடம் உறுதிப்பாட்டைக் கோரலாம். அவ்வாறு செய்வதன் மூலம், இலங்கையில் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் வெளிநாட்டு நிறுவனங்களும் அரசாங்கங்களும் அளப்பரிய பங்களிப்பை வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளது.



## “இன, மதவெறியை பரப்புகின்றனர்”

சில அரசியல் தலைவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் இனவாதத்தையும் மதவெறியையும் நாட்டில் பரப்பி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாட்டை அராஜகத்திலிருந்தும், இனவாதம் மற்றும் மதவாதத்திலிருந்தும் விடுவிப்பதற்கு ரணில் விக்ரமசிங்க இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மதவாதத்தையும் இனவாதத்தையும் நிராகரித்த தலைவர் எனவும், எனவே சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்களும் ஜனாதிபதியை வெற்றிபெறச் செய்யும் மேடையில் கைகோர்த்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட முஸ்லிம் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மினுவாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

“நாடு மற்றும் நாட்டின் எதிர்காலம் குறித்துச் சிந்தித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வெற்றிபெறச் செய்ய வேண்டும். கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் ஒருபோதும் பாராளுமன்றம் சென்றதில்லை. இப்போது நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது.

கம்பஹாவில் எமது ஜனாதிபதி தேர்தல் மேடையில் சிங்களம், தமிழ், முஸ்லிம், நீல சிவப்பு பச்சை என அனைத்துமே உள்ளன. நாட்டை அராஜகத்திலிருந்து காப்பாற்றவே இந்த ஒன்றிணைவு நடந்தது. இனவாதம் மற்றும் மதவாதத்திலிருந்து நாட்டை விடுவிக்க வேண்டும். இந்தப் பிரிவினையை உருவாக்காவிட்டால் சில தலைவர்கள் ஆட்சிக்கு வர முடியாது. இனவாதத்தையும் மதவாதத்தையும் இல்லாதொழித்த தலைவர் ரணில் விக்ரமசிங்க. அதனால்தான் அனைத்து சிங்கள முஸ்லிம் தமிழர்களும் அவருடைய மேடையில் இருக்கிறார்கள். இன்று எமக்கு புதிய அரசியல் மேடை கிடைத்துள்ளது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகப் பாராளுமன்றத்தில் அனுரகுமாரின் உரையைக் கேட்ட முஸ்லிம்கள் அவருக்கு எப்படி வாக்களிக்க முடியும்? எனவே, சந்தர்ப்பவாத அரசியலை நிராகரிப்பதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலில் நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது” என்றார்.

அமைச்சர் நளீன் பெர்னாண்டோ,

வர்த்தக வாணிபம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னாண்டோ, உரையாற்றுகையில்,“இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு நிறைய வேட்பாளர்கள் இருந்தாலும், அதிகம் பேசப்படுவது ரணில், சஜித் மற்றும் அனுரதான்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ரணில் விக்ரமசிங்கவைத் தவிர மற்ற இருவரும் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வாய்ப்பு கிடைத்தது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறிய போது நாங்கள் பாராளுமன்றத்தில் அனாதரவாக இருந்தோம். அதன்போது எதிர்க்கட்சித் தலைவரிடம் நாட்டைப் பொறுப்பேற்குமாறு கோரப்பட்டது.ஆனால் அவர் அந்தப் பொறுப்பை ஏற்கவில்லை. அனுரவும் அந்தப் பொறுப்பைத் தவிர்த்தார்.

ரணில் விக்ரமசிங்க தனியொரு பாராளுமன்ற உறுப்பினராக வந்து பொறுப்பேற்றார். தலைவர் என்றால் நாட்டுக்குத் தேவைப்படும் போது தலைமைத்துவத்தை வழங்க வேண்டும்.ரணில் விக்ரமசிங்க அந்தப் பொறுப்பை நிறைவேற்றினார். சரிந்த பொருளாதாரத்தை உயர்த்தினார்.கடன் மறுசீரமைக்கப்பட்டது. வீழ்ச்சியடைந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீட்டெடுத்தார். வடமாகாணத் தலைவர்கள் உட்பட அனைத்துத் தலைவர்களும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கின்றனர். அவர் ஒருபோதும் இனவாதத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லும் தலைவர் அல்ல. நாட்டை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்க வேண்டும்” என்றார்.

## “எரிவாயு விலையில்...

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது, ஆனால், மக்கள் நட்பு நிறுவனம் என்ற வகையில், உள்நாட்டில் எரிவாயு விலையை அதிகரிக்காமல் இருப்பதற்கு முடிவு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

உலகச் சந்தையில் விலை குறைவாக கொள்வனவு செய்யப்பட்ட எரிவாயு வரவிருக்கிறது, எனவே, தற்போது விலை திருத்தம் செய்யத் தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

## “சங்காய் ஒலிப்போம்”

ஆதரவளிக்க எடுத்த தீர்மானம் வரவேற்கத்தக்கது.

திருகோணமலையில் உள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் காரியாலயத்தில் சனிக்கிழமை (31) இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் உட்பட கட்சி பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் கருத்துரைத்த அவர், “ இந்த புரட்சிகரமான முடிவால் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாக அனைவரும் ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டும் எங்கள் ஒற்றுமை, தமிழ் கட்டமைப்பு ஒற்றுமையைக் காட்டியுள்ளது இதனால் தான் பல உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறோம் என்றார்.

சங்கு சின்னம் ஊடாக அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைத்து மக்களுக்குப் பலமான செய்தியைச் சொல்ல வேண்டும் எங்களுக்குள் பிரிவினை இல்லாது செயற்படவேண்டும். அந்த பலத்தைத் தமிழ்த் தேசியத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

பிரிவினை, மக்களுக்குக் கோபத்தை உண்டு பண்ணும் இதனால் இருக்கின்ற 10 பிரதிநிதித்துவம் ஐந்தாகக் குறையலாம் இந்த கூட்டு, தேர்தலுக்கான கூட்டாகவன்றி மக்கள் பிரச்சினைகளை வெளிக்கொணரவும் போராட்டங்களை முன்னெடுக்கவும் ஆலமரமாக்க இருக்க வேண்டும் திருகோணமலை மாவட்ட தமிழரசு கட்சியின் முடிவால், கிளிநொச்சி மாவட்ட கட்சி கிளையும் இதே முடிவெடுத்துள்ளது என்றார்.

## 1,745 முறைப்பாடுகள் பதிவு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரை) 1,745 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில், தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 711 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 965 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 10 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 59 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

## “தமிழர்கள் விடுதலைக்கு ஒன்றுபட வேண்டும்”



வெள்ளிமலை என அழைக்கப்படும் ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிகுடியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்..

பொது வேட்பாளர் என்ற ஒருவர் இருக்கும்போது தமிழ் கட்சிகளின் தலைவர்கள் பெரும்பான்மை இனத்திற்கு வாக்களிக்கச் சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் இலங்கையில் 1948ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரைக்கும் இருக்கும் சிங்கள பெரும் தலைவர்கள் காலத்திற்குக் காலம் வரும் தேர்தல்களில் அதைத் தருவோம், இதைத்தருவோம் என்று சொல்லி வாக்களித்த காலமும் உண்டு.

இற்றைவரையில் தமிழ் மக்களுக்கான தீர்வை எந்த சிங்கள தலைவர்கள் வந்தும் தருவோம் என்று சொன்னதில்லை. ஆனால் என்.எம்.பெரேரா அவர்கள் பதவிக்கு அமர்வதற்கு முதல் தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உள்ளது அதனைத் தீர்த்து வைக்க வேண்டும் என பேசினார். பதவிக்கு வந்த பின்னர் கொல்வின் ஆர்.டி.சில்வா உட்பட அந்த எண்ணம் மாறி சிங்கள வாதம் பேசினார்கள்.

எனவே, தமிழ் மக்கள் விடுதலை அடைய வேண்டுமாக இருந்தால் அனைவரும் ஒன்றுபட வேண்டும் ஆளுக்கு ஒருபக்கம் இருந்து திரிவதால் எந்தப் பலனும் பெறுவாரில்லை. இதற்குத்தான் ஒற்றுமையே உயர்ந்த ஏணி, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.


ஆகவே இவற்றுக்கு இணங்க கடந்த கால கசப்பான விடையங்களை மறப்போம் மன்னிப்போம். எதிர்கால தமிழினத்திற்காக ஒன்றுபடுவோம் என்பதற்காகத் தமிழ் தலைவர்கள் உருவாக வேண்டுமே தவிரப் பதவி மோகத்தால் ஆளுக்கொரு அறிக்கை விடுவதை அடியோடு நான் மறுக்கின்றேன் அதனைத் தமிழ் மக்களும் விரும்பவில்லை என அவர் இதன்போது தெரிவித்தார்.

## முடியை திருத்தச் சென்று நஞ்சானது

தனது தலைமுடியை அலங்காரம் செய்துகொண்ட பெண்ணொருவருக்கு ஒவ்வாமை ஏற்பட்டு, நஞ்சாகி, அப்பெண்ணின் தலைமுடி கடுமையாக உதிர்வடைந்ததை அடுத்து அப்பெண், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம், மினுவாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

மினுவாங்கொடை நகரிலுள்ள அழகு நிலையமொன்றுக்கு விருந்தொன்றில் கலந்துகொள்வதற்காகத் தலைமுடியைச் சீர்செய்வதற்காகச் சென்ற பெண்ணொருவர்



தலைக்குச் செலுத்தப்பட்ட பொருட்களால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாகக் கடுமையான முடி உதிர்வு ஏற்பட்டு கம்பஹா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடை, பொரகொட வத்த பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இந்த திருமணமான பெண், மினுவாங்கொடை பேருந்து நிலையத்திற்கு முன்பாக உள்ள சனச வணிக வளாகத்தில் அமைந்துள்ள அழகு நிலையமொன்றிற்கு முடியை அலங்கரிப்பதற்காகச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். .

தலைமுடியை அழகுபடுத்த சில ஹேர் ஸ்டைலிங் பொருட்களைத் தடவியுள்ளார். சிறிது நேரம் கழித்து, அந்த பெண் தனது தலையில் வீக்கத்தால் அசௌகரியமாக உணர ஆரம்பித்தார், தனக்கு ஏற்பட்ட ஒவ்வாமையைத் தெரிவித்துள்ளார். .

பின்னர், இரண்டு பெண்களும் அந்த பெண்ணின் தலையைக் கழுவித் துடைத்துள்ளனர், ஆனால், கடுமையான வீக்கம் காரணமாக, பெண் அவரது தலையைத் தொட்டபோது, அவரது முடி முற்றிலும் உதிர்ந்து விட்டது. பின்னர் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.







# 70ஆவது வருடாந்த திருவிழா

■ எம். எஸ். எம். நூர்தீன்

மட்டக்களப்பில், கத்தோலிக்க ஆலயங்களுள் புகழ்பெற்ற ஆயித்தியமலை புனித சதா சகாய மாதா திருத்தலத்தின் 70ஆவது வருடாந்த திருவிழா வெள்ளிக்கிழமை (30) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.











# “ஹக்கீம் ஆதரவளித்த எவரும் வென்றதில்லை”

■ நூருல் ஹுதா உமர்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தோல்வியை தழுவ போகிறார் என்பதை தெரிந்து கொள்ள பல காரணங்கள் தேவையில்லை. ஒரே ஒரு காரணம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எப்போது சஜித்துக்கு ஆதரவாக நின்று அவரை வெல்ல வைக்க போகிறேன் என்று கூறினாரோ, அந்த நிமிடமே அவர் தோற்று முடிந்தது என ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தலைவர் கலாநிதி அன்வர் எம்.முஸ்தபா தெரிவித்தார்.

சம்மாந்துறையில் இடம்பெற்ற இயலும் ஸ்ரீலங்கா பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடைய தலைவர் 2000ஆம் ஆண்டிலிருந்து எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு கொடுக்கிறாரோ அந்த வேட்பாளர் படுதோல்வியையே சந்தித்து வந்துள்ளார். தபால் வாக்களிப்புக்கு பின்னர் வந்து ஆதரவளித்த நல்லாட்சி அரசை தவிர, மற்ற எல்லா அரசாங்கமும் தோற்றே இருக்கிறது.

மக்கள் ஜனாதிபதி ரணிலின் பக்கம் இருப்பதனால் இந்த முறை சஜித் பிரேமதாச தோற்கின்றார் என்பது உறுதியாகியுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நாட்டை சுபீட்சத்துக்குக் கொண்டு செல்ல வேண்டுமா? அல்லது வங்குரோத்து நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டுமா? என்பது தொடர்பான தீர்மானத்தை எடுக்க வேண்டும். இந்த சம்மாந்துறை மக்கள் இந்த கூட்டம் நடக்கும் பொது மைதானத்தை மறக்க மாட்டார்கள். உங்களுக்கும் நன்றாக ஞாபகம் இருக்கும். கேஸ் சிலிண்டர் எடுப்பதற்காக வயதானவர்கள் மயங்கி விழுந்த சம்பவங்கள் சம்மாந்துறையில் மட்டுமல்ல, நாட்டின் பல பாகங்களிலும் பதிவாகியது. இதனை நினைவில் கொண்டு நாங்கள் வாக்களிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அளிக்கப்படுகின்ற வாக்குகள் இந்நாட்டை சுபீட்சமான நிலைக்கு கொண்டு செல்லும் என்றார்.




# ரணிலின் பதாதைகளை அகற்றிய பொலிஸார்


■ க.அகரன்

வவுனியாவில் காட்சி படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர்மஸ்தானின் பதாதைகள் பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை (01) அன்று அகற்றப்பட்டுள்ளது.

வவுனியாவில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்காக ரணில் விக்ரமசிங்க வவுனியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

இந்நிலையில், வவுனியா நகரப்பகுதிகளில் ரணில் மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர்மஸ்தான் ஆகியோரது உருவ படங்கள் பொறிக்கப்பட்டிருந்த பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

குறித்த பதாதைகள் ஜனாதிபதி ரணில் வருகை தருவதற்கு முன்பு பொலிஸாரால் அகற்றப்பட்டதாகவும் இச்சம்பவத்தைச் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த வவுனியா பிராந்திய ஊடகவியலாளர்கள் இருவரை அழைத்த பொலிஸார் அவர்களின் விபரங்களைப் பதிவு செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.



# “தவறானவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டாம்”

■ எஸ்.கணேசன்)



இனவாதத்தை தோற்றுவித்து, அதன் மூலம் பல சமூகங்களைப் பிரித்து ஆட்சி செய்த பலர் இன்றைக்கு எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாத அளவிற்கு விலாசம் இல்லாமல் காணாமல் போய்விட்டார்கள். நாம் அன்று எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல், வாக்களித்ததால் தான் கடந்த காலங்களில் நாம் கஷ்டத்தை அனுபவித்தோம். அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆட்சியைக் கைப்பற்றி ஒரு சுமுகமான நிலைக்குக் கொண்டு வந்தார் என இ.தொ.காவின் உபதலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி அக்குறனை பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது,

அமைச்சர் ஜீவன் தொண்டமான், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர், எடுத்துக் கொண்ட ஆய்வு அறிக்கையின் படி, எங்களுடைய மக்களுடைய ஜனாஸாக்களை எரித்தோ அல்லது தவறான முறையில் பயன்படுத்தத் தோன்றிய கொள்கை தீர்மானத்தை, ஆய்வு அடிப்படையில் நிரூபித்து இன்றைக்கு அரசாங்கத்தை முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கேட்க வைத்திருக்கின்றோம்.

கண்டி மாவட்டத்தில் மட்டும் தமிழ் பேசும் மக்கள் அதிகளவில் இருக்கின்றோம். ஒரு இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் வாக்காளர்கள், ஒரு இலட்சத்து 20 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் வாக்காளர்களும் இருக்கிறோம்.

ஆனால் , எங்களுடைய அடையாளத்தைப் பாதுகாக்கக் கூடிய, சில தலைமைகளை நாங்கள் தேர்ந்தெடுக்காததானால் நாங்கள் சில முக்கியமான எங்களுடைய அடிப்படைத் தன்மைகளையும் உருவாக்கங்களையும் விட்டுக்கொடுத்து செல்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இன்று 40 கட்சிகளுக்கும் அதிகமானவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவை வழங்கியுள்ளனர். ஜனாதிபதியாக ரணில் அவர்கள் தேர்ந்தெடுத்த பின்னர் பாராளுமன்ற, பிரதேச சபை, மாகாண சபை தேர்தல்கள் நடைபெற்றால், நீங்கள் ஊழல் வாதிகளையும், சுயநல அரசியல்வாதிகளையும் நிராகரியுங்கள்.

அது உங்களுடைய கைகளிலேயே இருக்கிறது. ஆனால், இன்று அவர்களைக் காரணம் காட்டி, அதில் உள்ளவர்களைக் காரணம் காட்டி நாட்டினுடைய தலைவிதியைத் தவறுதலானவர்களின் கைகளில் ஒப்படைக்க வேண்டாம் என்பதை நான் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.



# அம்பாறையில் வேலையற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

■ பாரூக் ஷிஹான்

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் வேலைவாய்ப்பு கோரி கறுப்பு பட்டி அணிந்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை ஞாயிற்றுக்கிழமை(01) முன்னெடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் அம்பாறை மாவட்ட காரைதீவு சந்திக்கு அருகாமையில் ஆரம்பமானதுடன், கறுப்பு பட்டி அணிந்து பல்வேறு சுலோகங்களை ஏந்தி அமைதியாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது இதுவரை வேலைவாய்ப்பு தொடர்பில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை எனவும் உடனடியாக ஜனாதிபதி வேட்பாளர்கள் என கூறிக் கொள்வோர் வெளிப்படையாகப் பட்டதாரிகளின் நிலைமை குறித்து தகவல்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் உதுமாலெப்பை முகமது முஹ்சீன் தலைமையில் இடம்பெற்றதுடன் செயலாளர் அப்துல் வஹாப் முப்லிஹ் அகமட் உட்பட ஏனைய வேலையற்ற பட்டதாரிகள் பதாகைகளைத் தாங்கியவாறு தமது தொழில் உரிமையினை வலியுறுத்தும் வகையில் பல்வேறு கோசங்களையும் எழுப்பி உரிய தரப்பினர் தீர்வை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.




## கம்பஹா பிரதேச சபை

### வாடகை அடிப்படையில் டபல் கெப் ரக வண்டியை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல்

### கொள்முதல் இலக்கம் – DS/06/2024

கம்பஹா பிரதேச சபை அலுவலக வேலைகளுக்காக 2024.10.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை 4WD வகையான டபல் கெப் வண்டி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிபெற்ற வழங்குனர்களிடம் இருந்து விலைமனு கோரப்படுகின்றன.

02. அது சம்பந்தமான விபரங்களை www.gampha.ps.gov.lk என்ற கம்பஹா பிரதேச சபையின் இனைய தளத்தில் அனுகுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

03. குறிப்பிடப்பட்ட வாடகை வண்டியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் இருத்தல் வேண்டும்.

- 2015 - 2020 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட 2450 CC - 3000 CC இடைப்பட்ட எஞ்சின் திறன் கொண்ட 4WD உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமம் உடைய மாடலாக இருத்தல் வேண்டும்.

04. 2024.09.02 ஆம் திகதி முதல் 2024.09.18 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி முதல் பி.ப 02.30 மணி வரையுள்ள காலப்பகுதியில் மீள் வழங்கப்படாத ரூ. 1000.00 (ஆயிரம் ரூபாய்) கட்டணத்தை பணமாக செலுத்தி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அபிவிருத்திப் பிரிவிலிருந்து ஏல ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மேலதிக விபரங்களுக்கு 033-2220145 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஏலப் பாதுகாப்பு தொகையாக ரூ. 25,000.00 (இருபத்தைந்தாயிரம் ரூபா) வை கம்பஹா பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்டு மேற்படி ரசீதுகள் சீல் செய்யப்பட்ட விலைப்பத்திரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. ஏலங்கள் அசல் மற்றும் நகல் ஆக தயார்செய்து 2024.09.19 ஆம் திகதி அன்று மு.ப 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு “பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட” என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும். அசல் மற்றும் நகல் கடிதவுறையில் இட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “வாடகை அடிப்படையில் டபல் கெப் ரக வண்டி பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோரல்” என குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலை மனுக்கள் கிராகரிக்கப்படும். விலை மனுக் கோரல்கள் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் கம்பஹா பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் வருகைத்தந்திருக்கும் ஏலதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

07. இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றத்தின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

**எஸ்.ஏ.என்.பீ. சுரவீர**
**பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள்,**
**கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரி**
**கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட.**

**2024.08.30**

# தொலைந்து போன கடிதங்களை நாம் எங்கு தேடுவது

தொழில்நுட்ப வளர்ச்சியை அடுத்து, பழைய பழக்கவழக்கங்களில் பல முற்றாகவே அழிந்து விட்டன. அதில் கடிதம் எழுதுவது காணாமலே போய்விட்டது எனலாம். 90 களுக்கு முற்பட்ட காலங்களில் கட்டாயம் கடிதங்கள் எழுதப்பட்டன.

தூர இடங்களில் வாழும் உற்றார் உறவினர்களின் வீடுகளுக்கு விருந்தினராகச் செல்வதாயின் கட்டாயம் கடிதம் மூலம் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்றவர்களும் கடிதங்கள் மூலமாகவே தங்களுடைய இன்ப, துன்பங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

தற்போது அவ்வாறு இல்லை. நினைத்த நேரத்தில் எந்தவோர் உறவினரிடமும் பேச முடியும். அவர்களுடைய முகங்களைப் பார்த்துக் கதைக்க முடியும். அந்தளவுக்குத் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. இது, வளர்ச்சியாகப் பார்க்கப்பட்டாலும், உறவினரிடமிருந்து வரும் கடிதத்தைப் பிரித்து குடும்பமே ஓரிடத்தில் அமர்ந்து இருக்க, ஒருவர் வாசிக்கும் போது, அதிலிருந்த சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

தங்களுடைய மத குறியீடுகளைக் கடிதத்தின் மேல் மூலையில் வரைந்து, ‘அன்புள்ள’ என ஆரம்பித்து ‘இப்படிக்கு’ என முடிக்கும் கடிதத்தின் இடைப்பட்ட எழுத்துக்கள் ஆயிரம், ஆயிரம் உணர்வுகளைச் சுமந்து நிற்கும். அக்கடிதங்கள் பொக்கிஷங்களாக பார்க்கப்பட்டன. காதல் கடிதங்களுக்குக் குறைவே இருக்காது. கற்பனை ஊற்றெடுத்து ஓடும். தற்போதெல்லாம், குறுஞ்செய்திக்குள் குறுகிவிட்டது.

புறாக்களில் தூது அனுப்பும் மன்னர் காலம் முதல் கடிதம் வழியாகக் காதலை வெளிப்படுத்திய கடைசி தலைமுறையான 90களைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். கடிதம் என்றால் என்ன தெரியுமா என பாடம் எடுக்கும் அளவுக்குக் கடிதங்களின் பயன்பாடு இன்று, குறைந்து விட்டது.

கடிதங்களின் பங்களிப்பை இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் விதமாகவும் முந்தைய தலைமுறைக்கு நினைவுகளைப் புதுப்பிக்கும் விதமாகவும் ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் 1ஆம் திகதி உலக கடிதம் எழுதும் தினம் கொண்டாடப்படுகிறது.

கடிதங்களால் ஈர்க்கப்பட்ட பிரிட்டிஷ் எழுத்தாளர் ரிச்சர்ட் சிம்ப்கின், கடந்த 2014ஆம் ஆண்டு உலக கடிதம் எழுதும் தினத்தை அறிமுகப்படுத்தினார். பள்ளிகளுக்குச் சென்று குழந்தைகளுடன் உரையாடும் அவர் “கடிதம் எழுதுங்கள், அது உங்கள் மரபணுவில் இருந்து வெளிப்படும் உணர்வுகளாகவும், உங்கள் கை ரேகைகளோடு பின்னிப் பிணைந்த வார்த்தைகளாகவும் இருக்கும்” என அறிவுறுத்தியுள்ளார்.

90களுக்கு முன்பு உறவினர்களின் கடிதங்களுக்காகக் காத்திருக்கும் உறவுகளும், இராணுவ வீரனின் நலனை உறுதிப்படுத்தக் காத்திருக்கும் மனைவி, குடும்ப அங்கத்தவர்களின் ஏக்கமும் தபால் நிலையங்களில் தங்கி இருந்திருக்கிறது.

தொலை தூரத்தில் இருக்கும் நண்பனுக்கு எங்கோ இருந்து, மற்றொரு நண்பன் எழுதும் கடிதத்தில் கிண்டலும் கேலியும் கடந்து செல்லும். அந்தளவுக்குக் கடிதங்கள் பல கதைகளைச் சொல்லும்.

பலரின் கண்ணீர், சிலரின் மகிழ்ச்சி என அனைத்தும் கடிதங்கள் வழியேதான் தெரிவிக்கப்படும். இன்று அனுப்பும் கடிதம் அதற்கான உரிமையாளரைச் சென்றடையும், அதற்குப் பதில் கடிதம் வரும் வரை காத்திருந்து மகிழ்ச்சி கொள்ளும் உறவுகள் மத்தியில் கடிதம் பொக்கிஷம் தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. என்றாலும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இடையே தொலைந்துபோன கடிதங்களை எங்குத் தேடுவது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.


அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# மௌனமாகவே நடக்கும் அடக்குமுறை

**லக்ஸ்மன்**

‘காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே?’ என்ற கேள்வியுடன், ‘எமது உறவுகளுக்கு நீதி வேண்டும்’, ‘சர்வதேச விசாரணையே வேண்டும்’, ‘காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் வேண்டாம்’, ‘மரணச் சான்றிதழ் வேண்டாம்’ போன்ற வேண்டுகோள்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்ட வண்ணமே இருக்கின்றன.

வழமைபோல், வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான ஆகஸ்ட் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளில் ஒன்றிணைந்து, குழுக்களாகவும் கவனயீர்ப்புப் போராட்டங்களும், பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இவற்றுக்குத் தடைகளும், தாக்குதல்களும் நீதிமன்றத் தடைகளும் ஏற்படுத்தப்பட்டன. இவை ஒன்றும் புதுமையல்ல. சாதாரணமானவைகளே.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டங்களானது அரசாங்கத்தினாலும், அரச பாதுகாப்புத் தரப்பினராலும் கணக்கிலெடுக்கப்படாத நிலையே காணப்படுகிறது. இது தொடர்வதானது அவ் உறவுகளின் மனோநிலையில் கவலையையும், இயலாமையையும் தோற்றுவிப்பதோடு மேலும் கடுமையாக நம்முடைய போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் காண்பிக்கவும் தூண்டுவதாகக் கொள்ளலாம்.

நீதியை வழங்குவோம் என்று அந்த அலுவலகத்தின் ஊடாக உறவுகளை நெருக்கடிக்குள்ளாக அரசாங்கம் முனைந்து வருகிறது. இலங்கையில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உள்ளூர் பொறுப்புக்கூறல் இல்லாமையை வலியுறுத்தும் ஐ.நா. பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும் என்பதனையும் கூறிவருகிறது.

ஏழு வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட காணாமல்போனோருக்கான அலுவலகம் காணாமல் போன ஒருவரைக் கூட கண்டுபிடிக்க முடியாததாக இருந்து வருகிறது என்பதுடன், இழப்பீடுகளையும், மரணச் சான்றிதழ்களையும் பலவந்தமாகத் திணிக்கவும் முயல்கிறது என்பது குற்றச்சாட்டு. ஆனால், சர்வதேச சமூகம் இந்த அலுவலகத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற வகையான கோரிக்கையையும் ஐ.நா. சில மாதங்களுக்கு முன்னர் விடுத்திருந்தது.

பொறுப்புக்கூறலில் இலங்கையின் முன்னேற்றம் ஐ.நா. ஊடாக தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது. ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயம், சர்வதேச சமூகம் அதன் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகள், உலகளாவிய அதிகார வரம்பு மற்றும் சர்வதேச நீதியின் பிற வழிகள், அத்துடன், இலக்கு, விதிக்கப்பட்ட தடைகள், நிவாரணம் உட்பட, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தச் சர்வதேச சமூகத்திற்குக் கிடைக்கும் அனைத்து வழிகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை அவ்வேளையில், வெளியிடப்பட்டிருந்தது. ஆனால், அது சார்ந்து எதுவும் நடைபெற்றதாகக் காணமுடியவில்லை.

1970களில் ஆரம்பித்து 2009 வரை உள்நாட்டுப் போர் முடிவடையும் வரையில், இலங்கை பாதுகாப்புப் படைகள் மற்றும் துணை இராணுவக் குழுக்களால் எதிரிகளை அச்சுறுத்துவதற்கும் அடக்குவதற்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்ட பல வலிந்து காணாமலாக்கப்பட்டமைகளால் தற்போதும் இன்னல்களை அனுபவிப்பவர்களே அதிகமாகும். இருந்தாலும், இந்தக் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் அனைத்து மட்டங்களிலும் காணப்பட்டாலும் அவர்கள் நீதியிலிருந்து தப்பித்துக் கொண்டிருப்பது கவலைக்குரியதாகும். தண்டனையிலிருந்து தப்பிக்கும் நிலை ஆழமாக வேரூன்றி இருப்பதானது எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழும் அபாயத்தையும் உருவாக்கலாம் என்ற அச்சமும் காணப்படுகிறது.

காணாமலாக்கப்பட்ட மையை பல்வேறு தரப்புகளும், வெளிநாடுகளும் அரசியலாக்குவதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டினாலும், அதனை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எந்தவொரு செயற்பாட்டையும் அரசாங்கம் முன்னெடுக்காமையே இதுவரை பிரச்சினையாக உள்ளது.

இதேவேளை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த வெள்ளிக்கிழமை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து துன்புறுத்தி வருவதாகவும், கண்காணிப்பு, மிரட்டல், பொய்யான குற்றச்சாட்டுகள், வன்முறை மற்றும் தன்னிச்சையான கைதுகள் மூலம் பாதுகாப்புப் படையினர் அவர்களது குடும்பங்களை துன்புறுத்தி வருவதாக தெரிவித்துள்ளது.
உண்மையை அறிதல், நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான உறுதிப்பாடு ஆகியவற்றில் நிலையான முன்னேற்றத்தை எதிர்பார்க்கும் சர்வதேச சமூகம் அது இலங்கையில் நடைபெறவில்லை என்பதனை உறுதிப்படுத்துகின்றது. இருந்தாலும், இலங்கை அரசாங்கத்தின் நீதியை நம்பாத பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதியைப் பெற்றுக்கொடுக்க முன்வராமை யானது சர்வதேச சமூகத்திலும் சந்தேகத்தினையே ஏற்படுத்துகிறது.

காணாமலாக்கப்பட்டோருக்கான நீதியை எதிர்பார்த்து முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களுக்கும் எதிர்ப்புகள், விமர்சனங்கள் வெளியிடப்பட்டாலும், எதிர்பார்ப்புகள் இருந்த வண்ணமே இருக்கின்றன. ஆனால், இவ்விடயம் தொடர்பில் அரச தரப்பால் முன்வைக்கப்படுகிற கருத்துக்கள் அவர்களுடைய கோரிக்கைகளை மழுங்கடிக்கும், கொச்சைப்படுத்துவதாகவே இருக்கின்றன. இவ்வாறான நிலையில், தான் யார் அவற்றுக்கான நீதியை வழங்குவது என்ற கேள்வி தோன்றுகிறது. இனப் பிரச்சினையின் காலான முரண்பாட்டினால் உருவான யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்து விட்டது. இன்னமும் தங்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் சந்திப்புகளையும், அறிக்கை சமர்ப்பிப்புகளையும் முன்னெடுத்துவரும் தமிழ் மக்கள் தமக்கான நீதி ஒவ்வொரு வருடத்தின் மார்ச் மாதத்திலும், செப்டெம்பர் மாதத்திலும் கிடைத்து விடும் என்று நம்பிக்கை கொள்வதும், காலத்துக்குக் காலம் வெளிவரும் சர்வதேச, மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகளைக் கண்டு தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்வதுமே நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் 3 தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த உள்நாட்டு யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்களாகிய பின்னும் ஏன் இனப் பிரச்சினை ஒன்று ஆரம்பமானது என்பது தொடர்பான கேள்விக்கே பேரினவாதத் தரப்பினரிடம் சரியான பதில் இல்லை என்ற நிலை காணப்படுகிறது. காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி கோரி வடக்கில் நடைபெற்று வரும் தொடர் போராட்டம் 3,000 நாட்களை எட்டவிருக்கிறது. இப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளும் பலர் இறந்தும் விட்டனர். அடுத்த சந்ததிக்கு இப்போராட்டத்தினை கையளிப்பதற்கான முன்னெடுப்புகளில் அவர்கள் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றனர். அப்படியானால், இப்போது இந்தப் போராட்டம் தொடர்வது எதற்காக என்பதுதான் கேள்வி. இந்தக் கேள்விக்கான பதிலைக் காண நாம் செய்ய வேண்டியிருக்கிறது என்றும் இந்த நேரத்தில் சிந்திக்க வேண்டியது கட்டாயம். ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக 2015இல் முதல் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தத்தின் போது, இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் தொடர்பில் எந்தவிதமான தீர்மானகரமான விடயத்தையும் நிகழ்த்தவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

நல்லிணக்கத்தை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறல், மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு காணாமல் போனோரைக் கண்டறிவதற்கான அலுவலகமொன்றினை நிறுவுதல், உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள நிகழாமைக்கான ஆணைக்குழு நிறுவுதல், நீதிக்கான பொறிமுறை, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை நிறுவுதல் ஆகிய நான்கு முக்கிய விடயங்களை உள்ளடக்கிய 25 தீர்மானங்கள் 2015இல் தீர்மானத்தில் உள்ளடங்கி இருந்தன. ஆனால், இவை ஓரளவுக்கேனும் நடைபெற்றிருக்கிறது என்ற கேள்வியே இப்போதும் பொதுவெளியில் எழுப்பப்படுகிறது.

தமிழருக்கெதிரான தொல்பொருள் செயலணி, தொடர்ச்சியான இனப் பரம்பலை மாற்றியமைக்கும் செயற்திட்ட செயற்பாடுகள், பௌத்த மயமாக்கல் முயற்சிகள் என தொடரும் நெருக்கடிகளுக்கு நல்லிணக்க நல்லெண்ண வெளிப்பாடுகள் எனப் பெயர் கூற முடியுமா?

வெகுஜன ரீதியான போராட்டம், போரில் இறந்தவர்களை நினைவு கூருதல், மரணமானவர்களுக்கு அஞ்சலி செலுத்துதலுக்குக் கூட அனுமதியில்லாத, அவர்களுக்கெதிராக தடையுத்தரவுகளும், வழக்குத் தாக்கல்களும்தான் நடைபெற்றிருந்தது. அப்படியானால் நீதி வழங்குவதனை விடவும், தீர்வுகளுக்காக முயற்சிப்பதை விடவும் உரிமைப் போராட்டங்களையும், அதில் ஈடுபடுபவர்களையும் அடக்கி, ஒடுக்கிவிடுவது ஒன்றுதான் முடிவா.

1956களிலே ஆரம்பித்து விட்ட திட்டமிட்ட இன அழிப்பையும் சிங்கள மயமாக்கத்தினையும் செய்து கொண்டிருக்கும் பெரும் தரப்புடன், ஒரு இனம் அகிம்சை ரீதியாக 25 வருடங்களைத் தாண்டிப் போராடி, ஆயுத ரீதியாக 35 வருடங்களுக்கும் மேலாக யுத்தம் செய்து இன்னமும் உறைக்காத விடயமாகிப்போன தமிழர்களுடைய இனப் பிரச்சினையின் ஒரு பகுதியாக இருக்கிறது. காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி கிடைக்குமா, அல்லது அது கையாலாகா முயற்சிதான்.

எதிர்பார்ப்புகள் நிறைவேறாத மனித உரிமை தினம், காணாமலாக்கப்பட்டோருக்கான தினம் என்றெல்லாம் உரிமைகள் ஞாபகப்படுத்தபட்டாலும் எதுவும் நடைபெறாத ஒரு நாடாக இலங்கை இருப்பதற்கு யாரைப் பொறுப்புச் சொல்வது, இதற்குப் பெயர்தான் என்ன?



## வாழ்வியல் தரிசனம்

ஒரு சிலர் தெரியாதவர்களுடன் கூட மோதுகின்றனர். பொது இடங்களில், பஸ்கள், விழாக்கள், சந்தைகளில் கண்டபடி வாக்குவாதம் செய்கின்றார்கள். மிக மோசமாகச் சண்டையிடுகின்றார்கள்.

பகைமை எப்படித் திடீரென முற்றுகின்றது. பலரை பார்க்கும்போது, வெட்கமே இல்லாமல், ஆணவத்துடன் செயற்படுதல் மனிதமற்ற செயலாகும்.

பொது இடங்களில், கூட்ட நெரிசலில் முந்திக்கொள்ள முனைவார்கள். இதன்போது வாக்குவாதம் ஏற்படும். அப்புறம் சண்டைதான். இன்னும் சிலர், தெருவால் போகின்றவர்களை வேண்டுமென்றே கேலி செய்வார்கள். கேட்பவர்கள் விடுவார்களா? மோதல் வெடிக்கும்.

திருமண வீடுகளில் சிலர் அநாகரிகமாக நடந்து கொள்வார்கள். ஏதாவது சின்ன விடயங்களைப் பெரிதாக்கி, வார்த்தைப் பிரயோகங்களை நெருப்பாக வீசுவார்கள்.

சந்தோசம் சிலருக்குப் பிடிப்பதே இல்லை. விழாக்களில் அரசியல் பேசி, சிலர் தங்கள் கட்சியே பெரிதென விவாதிப்பார்கள். அதுவே, கலிங்கத்துப் போர் போலாகி விடும். வெட்கமே இல்லையா?

எந்த விழாவுக்கும் பொலிஸாரை வரவழைக்க வேண்டியுள்ளது. ஆணவத்தை அடக்கி பொறுமையாக இருங்கள்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

## கவனம் செலுத்துங்கள்

மாத்தளையில் 1939ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழைமிக்க கட்டிடம் ஒன்றில் இஸ்மாலியா வித்தியாலயம் எனும் பெயரில் பாடசாலை ஒன்று நீண்ட காலமாக இயங்கி வருகிறது.

சுமார் 250 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையின், முன்பக்கக் கட்டிடம் கீழிலிருந்து மேல் நோக்கி நீண்ட வெடிப்பு ஏற்பட்டு இருப்பதைக் காணலாம்.

இதுகுறித்து இப்பாடசாலை அதிபர் உட்பட அபிவிருத்திச் சங்கம் மாத்தளை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று நீண்ட நாட்களாகியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாணவர்கள் இக்கட்டிட பகுதியில் இருந்து கல்வி கற்பதையும் இங்கு நடமாடுவதையும் தவிர்க்குமுகமாக கயிறு கட்டி, சிவப்பு எச்சரிக்கை வைக்கப்பட்டிருப்பதுடன், இக்கட்டிடம் உடைந்து விழக்கூடிய நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

– ஏ.எம்.ஜலீல்



Soy Connextglobal மாநாட்டில் நியூ அந்தனீஸ் குரூப்

# கௌரவிப்பைப் பெற்றது

நியூ அந்தனீஸ் குரூப் தொடர்ச்சியான முன்னெடுத்து வரும் சூழல்சார் மற்றும் நிலைபேறாண்மை செயற்பாடுகளுக்காக சான்பிரான்சிஸ்கோ மெரியட் மார்கிசில் நடைபெற்ற Soy Connext, Global U.S. Soy மாநாட்டில் கௌரவிப்பைப் பெற்றிருந்தது. இந்த மாநாடு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



U.S. Soybean Export Council (USSEC) இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆண்டுக்கான Soy Connext மாநாட்டில், 60க்கு மேற்பட்ட நாடுகளின் 700க்கும் அதிகமான பங்குபற்றுநர்கள் பங்கேற்றிருந்தனர். தற்போதைய சந்தை விருத்தி மற்றும் எதிர்கால போக்குகள், U.S. Soy விவசாயிகளின் கருத்துகள், போஷணை விஞ்ஞானம், உணவு லேபலிடல் மற்றும் பொதியிடல், விநியோக சங்கிலி மற்றும் நிலைபேறாண்மை போன்றன தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த ஆண்டு ஜூலை மாதம், நியு அந்தனீஸ் குரூப்பின் தயாரிப்புகளுக்கு, நிலைபேறான U.S. Soy and Fed உடன் நிலைபேறான U.S. Soy லேபிள்கள் போன்றன வழங்கப்பட்டிருந்தன. அதனூடாக முழு தெற்காசிய பிராந்தியம் மற்றும் உப சஹாரா ஆபிரிக்க பிராந்தியத்திலும் இந்த சான்றை பெற்ற முதல் நிறுவனமாக திகழ்கின்றது. இதனைத் தொடர்ந்து, துறையைச் சேர்ந்த பலரும் இந்த முறைமையை பின்பற்றியிருந்தனர்.

சிறந்த தலைமைத்துவம் மற்றும் தூர நோக்குடைய செயற்பாடுகளினூடாக, நியு அந்தனீஸ் குரூப் நிலைபேறான வழிமுறைகளை பின்பற்றியிருந்தது. நிலைபேறான U.S. Soy பயணத்தில் அதன் பணிகள் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக USSEC அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளதுடன், நேரடியாக அவர்களுடனம் மற்றும் பல இதர தரப்பினருடனும் பணியாற்றுகின்றது என USSEC இன் தெற்காசிய மற்றும் உப சஹாரா ஆபிரிக்க பிராந்திய பணிப்பாளர் கெவின் ரோப்கே தெரிவித்தார்.

U.S. Soy Sustainability Assurance Protocol (SSAP) இனால் உறுதி செய்யப்பட்ட சோயா அடங்கியிருக்கும் தயாரிப்புகளை ஊக்குவிப்பதில் லேபிள்கள் பயன்படுத்தப்படுகின்றன. USSEC இனால் வடிவமைக்கப்பட்ட முதலாவது நிலைபேறான உறுதிப்படுத்தல் திட்டமாக அமைந்துள்ளது.

நியு அந்தனீஸ் இனால் தற்போது தமது சோயா கொள்வனவுகளின் போது, காபன் வெளிப்பாட்டில் SSAP சான்றிதழை பயன்படுத்த முடியும். இதனை காபன் கணக்கீட்டில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

தொழிற்துறை மற்றும் பிராந்தியத்தில் நியு அந்தனீஸ் தொடர்ந்தும் அதன் நிலையை பேணுவதுடன், நிலைபேறான கோழி இறைச்சி உற்பத்தியாளராக உறுதியாக திகழ்கின்றது. நிலைபேறான U.S. soy ஐ பெற்றுக் கொள்வது முதல், உயிரியல் ரீதியில் உக்கும் பொதியிடல் முறைகள் வரை பல இதர வழிமுறைகளையும் பின்பற்றுகின்றது. நியு அந்தனீஸ் தனது செயற்பாடுகள் மற்றும் விநியோக செயற்பாடுகளின் போது நிலைபேறான அம்சங்களை பின்பற்றுகின்றது. FSSC 22000 சான்றிதழை பெற்றுக் கொண்ட இலங்கையின் முதலாவது கோழி இறைச்சி உற்பத்தியாளராகவும் திகழ்கின்றது.

U.S. Soy ஐ பெற்றுக் கொண்ட நியு அந்தனீஸ், வாடிக்கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த தயாரிப்புகளை பெற்றுக் கொடுப்பதில் அதிகளவு முக்கியத்துவத்தை வழங்குகின்றமை வெளிப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் சோய் தயாரிப்புகள் உயர் தரமானவை என்பதுடன், கால்நடை பண்ணைகள், உணவு ஆலைகள் மற்றும் எண்ணெய் க்ரஷர்களின் வினைத்திறனை மேம்படுத்துகின்றன என்பது ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. சோயா உணவூட்டல் பிரிவில் சிறந்த சுவைகளை அறிமுகம் செய்துள்ளதுடன், பண்ணை வழிநடத்தல் மற்றும் பேணல் முயற்சிகளில் முக்கிய பங்காற்றுகின்றது. குறைந்தளவு காபன் வெளியீட்டை ஏற்படுத்தவும் பங்காற்றுகின்றது.

கொள்கைகளுக்கான உறுதிப்பாட்டை

# சன்ஷைன் ஹோல்டிங்ஸ் வலுப்படுத்தல்

சன்ஷைன்ஹோல்டிங்ஸ், அதன்சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (Environmental, Health and Safety - EHS) ஆகிய கொள்கைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. சன்ஷைன் ஹோல்டிங்ஸின் செயல்பாடுகளில் ஆழமாகப் பதிந்துள்ள பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல்பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தும் வகையில், அண்மையில் Sunshine Safety Forumஇல்இந்த அறிவிப்பு செய்யப்பட்டது.தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் (National Institute of Occupational Safety and Health - NIOSH) பணிப்பாளர் நாயகம் டொக்டர் சம்பிகா அமரசிங்க இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், இந்தநிகழ்விற்கு சன்ஷைன் குழுமத்தின்பிரதம நிறைவேற்று அதிகாரி ஷியாம் சதாசிவம், சன்ஷைன் ஹோல்டிங்ஸின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.




ஊழியர்களின் சுகவாழ்வை உறுதிப்படுத்தவும், சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், பாதுகாப்பு மற்றும் பொறுப்புணர்வு கலாசாரத்தை மேம்படுத்தவும் இன்று நிறுவனங்களுக்கு EHS கொள்கைகள் முக்கியமானவை. மேலும், இது பணியிட விபத்துக்களில் இருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்கவும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விபத்து தொடர்பான செலவுகளைக் குறைக்கவும் மற்றும் நிலையான செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் உதவுகிறது. இந்த சூழ்நிலையில், சன்ஷைன் ஹோல்டிங்ஸ், பாதுகாப்பான மற்றும் அதிக பொறுப்பான பணிச்சூழலை உறுதி செய்வதற்காக அதன் EHS கொள்கைகளை புதுப்பிப்பதன் மூலம் பொறுப்பான வணிக நடைமுறைகளுக்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.புதுப்பிக்கப்பட்ட EHS கொள்கைகள், அங்கு பணிபுரியும் 1,700க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்குப் பொருந்தும் நவீன பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தரங்களை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாதவிடாய் வறுமை



கணேஸ்குமார் மதியந்தி
ஊடககற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



மாதவிடாய் மற்றும் மாதவிடாய் வறுமை என்பது பெண்கள் எதிர்கொள்ளும் உடல் மற்றும் உடலியல் ரீதியான சிக்கல்கள் ஆகும். பெண்களின் உடல் மறு உற்பத்திக்குத் தயாராகும்போது, மாதவிடாய் என்பது ஆரம்பிக்கின்றது. சராசரியாக ஒரு பெண் தனது 12 வயதுக்குப் பின் முதல் மாதவிடாய் சுழற்சியை எதிர்கொள்ள ஆரம்பிக்கின்றாள். ஆனால், சில பெண்கள் 9 வயதிலேயே கூட முதல் மாதவிடாய் சுழற்சியை எதிர்கொள்கின்றார்கள் மாதவிடாய் சுழற்சியானது பெண்களின் உடலில் சுரக்கும் ஓமோன்களின் செயல்பாட்டினால் இடம்பெறுகின்றது. பொதுவாக இந்த மாதவிடாய் சுழற்சி 28 நாட்களுக்கு ஒரு முறை இடம்பெறும் என்றாலும், சில பெண்களுக்கு மாதம் ஒருமுறை மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை என்றவாறு ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சி இடம்பெறுகின்றது. இதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன.

மாதவிடாய் காலங்களில் பெரும்பாலான பெண்கள் உடலில் மற்றும் உளவியல் ரீதியான ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். மாதாந்தம் பெரும்பாலான பெண்கள் வயிற்றுவலி, உடல் சோர்வு, தலைசுற்றல், வாந்தி மற்றும் மனச்சோர்வு என்பவற்றிற்கு முகம் கொடுக்கின்றனர். பொதுவாக மாதவிடாய் காலங்களில் 50 மில்லி லீட்டர் வரை இரத்தபோக்கு இருக்கும். சில வேலைகளில், அதிக இரத்தபோக்கு கடுமையான வயிற்று வலி என்பவற்றையும் பெண்கள் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

எமது சமூகம் மாதவிடாயின் போது, இரத்தப்போக்கை அழுக்கு, தீட்டு என கற்பிதம் செய்து கொள்கிறது. தோட்டத்தில் காய், பழங்களை பறிக்கக்கூடாது, கோவிலுக்கு செல்லக்கூடாது, கிணற்றில் நீர் இரைக்கக் கூடாது என மாதவிடாய் காலகட்டப்பாடுகள் ஏராளம் இன்றும் உலகத்தில் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மாதவிடாய் காலங்களில் பெண்கள் தூய்மையற்றவர்களாகச் சித்திரிக்கப்படுகின்றார்கள். பெரும்பாலான மதங்களும் பெரும்பான்மையான அவர்களின் பழைமைவாத மற்றும் பிற்போக்குத்தனமான சிந்தனைகள் இதற்கு காரணமாக இருக்கின்றன.

மாதவிடாய் வறுமை என்பது மாதவிடாய் காலத்தில் பெண்களின் அடிப்படை சுகாதாரம் சூழ்நிலைக்கான அத்தியாவசியமான விடயங்களைப் பெறமுடியாமல் இருப்பதாகும். இது குறிப்பாக மாதவிடாய் துவாய்கள் அல்லது மாதவிடாயின்போது, பயன்படுத்தப்படும் தூய்மையான பொருட்கள் போதிய அளவில் பெற்றுக்கொள்ள இயலாமை, மலசலக் கூட வசதிகள், போதிய அளவான நீர் மற்றும் ஏனைய சுகாதாரம் பேணலுக்கான விடயங்களைக் குறிக்கின்றது. இது சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார ரீதியான தடைகளைக் குறைப்பதுடன், மாதவிடாய் மற்றும் மாதவிடாய் வறுமை தொடர்பான கல்வியறிவின்மையினால் ஏற்படும் சவால்களையும் குறிக்கின்றது.

குறிப்பாக மாதவிடாய் வறுமையானது, உடல் உள மற்றும் உணர்வு ரீதியில் பெண்களைப் பாதிக்கின்றது. மாதவிடாய் காலங்களில் சுத்தமாக இருப்பது அவசியமாகும், மாதவிடாய் வறுமை காரணமாகப் பெண்கள் பல்வேறு பட்ட நோய்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரிடுகின்றது. மறு உற்பத்தி செயற்பாட்டின் அடிப்படையில் நோக்கினால், மாதவிடாய் வறுமை என்பது பெண்களுக்குரிய பிரச்சினை மட்டுமின்றி, ஒட்டுமொத்த சமூகத்தின் உடைய பிரச்சினையாகவும் நோக்கப்படுகின்றது.

மாதவிடாய் வறுமை பற்றி முதலில் பேசிய நாடாக ஸ்கொட்லாந்து காணப்படுகின்றது. சாதாரணமாக ஒரு பெண் தன்னுடைய வாழ்நாளில் சுமார் 30 வருடங்களாக மாதவிடாய் சுழற்சிக்கு உள்ளாக்கப்படுகின்றாள். இதன்படி, ஒருமாத மாதவிடாய் காலத்தில் 20 நாப்கின்கள் என குறிப்பிடும் பொழுது, ஒரு வருடத்திற்கு 240 நாப்பின்களாகவும் 30 வருடங்கள் எண்ணிக்கையில் 7,200 நாப்கின்களாக பயன்படுத்தப்படுகிறது. எனவே, நாட்டிலுள்ள பெண்கள் பயன்படுத்துகின்ற நாப்கின்கள் தொன் கணக்கில் செல்கின்ற போக்கு காணப்படுகிறது. இவ்வாறான நிலைப்பாடு இருந்தாலும், இம்மாதவிடாய் வறுமையானது பெரும்பாலும் வருமானம் குறைந்த குடும்பங்களில் உள்ள பெண்களையே அதிகளவு பாதிக்கின்றது.

குறிப்பாக மலையகத்தினை பொறுத்தவரையில், தேயிலை பறிப்பதற்காகச் செல்லும் பெண்கள் அதிகாலை 7 மணி தொடங்கி நான்கு மணி வரை குறித்த மாதவிடாய் துவாயை வாங்குவதற்கான வசதி இன்மையினால் அவர்கள் துண்டு சேலைகளைப் பயன்படுத்துகின்ற போக்கே அதிக அளவு காணப்படுகின்றது. அது மாத்திரமல்லாமல், அவர்கள் வேலை செய்யும் பொழுது தங்களுடைய துவாய்களை மாற்றிக் கொள்வதற்கான ஒரு கழிவறை வசதி கூட இல்லாமையினால், அவர்கள் அதிக அளவு உடல் ரீதியான சுமைகளோடு காடு மலையெல்லாம் ஏறி தலையிலும் கொழுந்தினை சுமந்து செல்கின்ற போக்கைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு சிறந்த ஒரு உதாரணமாக, என்னுடைய தாயைக் குறிப்பிடலாம். அவர் சுமார் 25 வருடங்களாகத் தேயிலை பறிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார் அன்று தொடங்கி இன்று வரையிலும் மாதவிடாய் காலங்களில் அவர்கள் படும் இன்னல்கள் மாறவில்லை என்றே குறிப்பிட்டாக வேண்டும்.

இவ்வாறான தன்மையில் ஒரு குடும்பத்தில் பல பெண்கள் காணப்படும் இடத்தில் மாதவிடாய் காலங்களில் மாதவிடாய் துவாய்களை வாங்குவது என்பதே பெரும் சவால் என்றே கூறவேண்டும். மாதவிடாய் காலங்களில் நாப்கின்கள் வாங்குவதற்கான வசதி இன்மையினாலும், தன்னுடைய சட்டையில் இரத்தம் படிந்து ஆண்கள் ஏதாவது சொல்லி விடுவார்களோ என்ற தயக்கத்தினாலும், பாடசாலைக்குச் செல்லும் பெண்கள் அக்காலப்பகுதியில் பாடசாலைக்குச் செல்லாத நிலை அதிகமாக உள்ளதோடு, உடல் ரீதியாகவும் பல்வேறு உபாதைகளுக்கு முகம் கொடுப்பதனை காணமுடிகிறது. பெண்களுக்கு இயல்பாக வரும் மாதவிடாயைத் தீட்டாகச் சித்திரித்த சமூகம், ஏனோ மாதவிடாய் வறுமை (menstrual poverty) பற்றிப் பேச மறுத்து விட்டது. அது பெண்களுடைய பிரச்சினை என்பதால், ஆணாதிக்க சமூகம் புறக்கணித்திருக்கலாம். மாதவிடாயைச் சுற்றியுள்ள மூடப்பழக்கங்களை உடைத்தெறிய வேண்டியது எந்தளவு அவசியமோ, அதேபோல், மாதவிடாய் வறுமையை ஒழிக்க வேண்டியதும் அவசியம். இந்தியச் சமூகத்தில் பெண்களுக்கு மாதவிடாய் சுகாதாரம் என்பதே கேள்விக்குறியானதாக இருக்கிறது.

இவ்வாறான மாதவிடாய் வறுமையினை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கிலேயே, மே 28 மாதவிடாய் சுகாதார நாளாக அடையாளப்படுத்தப்பட்டது. மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்து நிலவும் மௌனத்தைத் தகர்த்து, பெண்களுக்காகவும் சிறுமியருக்குக்காகவும் ஒற்றுமையான வலுவான குரல் எழுப்புவதற்காகத் தனிநபர்கள், அமைப்புகள், சமூக வணிகங்கள் menstrual poverty மற்றும் ஊடகங்களை ஒன்றிணைக்கும் மேடையாகச் செயல்படுவதே மாதவிடாய் சுகாதார நாளின் குறிக்கோளாகும்.

(செவ்வாய்க்கிழமை தொடரும்...)

## அறிவித்தல்
### லங்கா வென்ச்சர்ஸ் பிஎல்சி (PQ95)
### 32வது வருடாந்த பொதுக்கூட்டம்

லங்கா வென்ச்சர்ஸ் பிஎல்சியின் ("கம்பெனி") முப்பது இரண்டாவது (32வது) வருடாந்த பொதுக்கூட்டம் 2024 செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆன்லைனில் மெய்நிகர் தளம் மூலம் நடைபெறும் என்பதை இதன்மூலம் அறிவிக்கிறோம். ஏஜிஎம்மில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் வழக்கமான வணிகத்தை நடத்துவதன் நோக்கம், கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) :
https://cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LVEN.N0000 இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பங்குதாரர்களுக்கான விரிவான சுற்றறிக்கை பெற்றுக்கொள்ளலாம்

விரிவான ஆண்டறிக்கை, சந்திப்பு பற்றிய அறிவிப்பு மற்றும் நிகழ்ச்சி நிரலுக்கு, பதிலாள் மற்றும் பதிவுப் படிவம் ஆகியவற்றை, கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதைப் பார்க்கவும்.
https://cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LVEN.N0000

வருடாந்திர அறிக்கையின் அச்சிடப்பட்ட நகலைக் கோரும் எந்தவொரு பங்குதாரருக்கும், அந்தக் கோரிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து எட்டு (08) சந்தை நாட்களுக்குள் அத்தகைய அச்சிடப்பட்ட நகல் வழங்கப்படும். இந்தக் கோரிக்கையை நீங்கள் lvl@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்

மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் (வேலை நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.30 வரை) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் ஒருவரை தொடர்பு கொள்ளவும்.

திருமதி. லக்மி ஹன்சிகா
முதலீட்டு ஆய்வாளர் [(தொ.பே) 011 2439201 / (மின்னஞ்சல்) lakmi@lvlenergyfund.lk ]

திருமதி. அனுபமா வெல்கமகே
செயலாளர் [(தொ.பே) 011 2439201 / (மின்னஞ்சல்) lvl@sltnet.lk ]

**பணிப்பாளர் சபையின் ஆணைப்படி**
**கோபரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்**
**செயலாளர்கள்**
**லங்கா வென்ச்சர்ஸ் பிஎல்சி**
**கொழும்பு, இது 2024 செப்டம்பர் மாதம் 02 ஆம் திகதி அன்று**

## அறிவித்தல்
### எல்விஎல் எனர்ஜி ஃபண்ட் பிஎல்சி (PV1966PB/PQ)
### 13 வது வருடாந்த பொதுக்கூட்டம்

எல்விஎல் எனர்ஜி ஃபண்ட் பிஎல்சியின் ("கம்பெனி") பதின்மூன்றாவது (13வது) வருடாந்த பொதுக்கூட்டம் 2024 செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆன்லைனில் மெய்நிகர் தளம் மூலம் நடைபெறும் என்பதை இதன்மூலம் அறிவிக்கிறோம். ஏஜிஎம்மில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் வழக்கமான வணிகத்தை நடத்துவதன் நோக்கம், பங்குதாரர்களுக்கு விரிவான சுற்றறிக்கை நிறுவனத்தின் இணையதளத்தில் கிடைக்கும் https://www.lvlenergyfund.lk/ மற்றும் கொழும்பு பங்குச் சந்தையின் (CSE) இணையதளத்தில் கிடைக்கும் https://cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LVEF.N0000

விரிவான ஆண்டறிக்கை, சந்திப்பு பற்றிய அறிவிப்பு மற்றும் நிகழ்ச்சி நிரலுக்கு, பதிலாள் மற்றும் பதிவுப் படிவம் ஆகியவற்றை, கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதைப் பார்க்கவும். https://cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LVEN.N0000 மற்றும் நிறுவனத்தின் இணையதளத்தில் கிடைக்கும் https://www.lvlenergyfund.lk/

வருடாந்திர அறிக்கையின் அச்சிடப்பட்ட நகலைக் கோரும் எந்தவொரு பங்குதாரருக்கும், அந்தக் கோரிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து எட்டு (08) சந்தை நாட்களுக்குள் அத்தகைய அச்சிடப்பட்ட நகல் வழங்கப்படும். இந்தக் கோரிக்கையை நீங்கள் contact@lvlenergyfund.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்

மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் (வேலை நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.30 வரை) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் ஒருவரை தொடர்பு கொள்ளவும்.

திருமதி. லக்மி ஹன்சிகா
முதலீட்டு ஆய்வாளர் [(தொ.பே) 011 2439201 / (மின்னஞ்சல்) lakmi@lvlenergyfund.lk ]

திருமதி. அனுபமா வெல்கமகே
செயலாளர் [(தொ.பே) 011 2439201 / (மின்னஞ்சல்) lvl@sltnet.lk ]

**பணிப்பாளர் சபையின் ஆணைப்படி**
**கோபரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்**
**செயலாளர்கள்**
**லங்கா வென்ச்சர்ஸ் பிஎல்சி**
**கொழும்பு, இது 2024 செப்டம்பர் மாதம் 02 ஆம் திகதி அன்று**



பாத்திமா சபா
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# இணையப் பாதுகாப்பு ஏன் அவசியம்?

> “தகவல் பகிர்வு, பணப் பரிமாற்றம், கல்வி, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வணிக செயல்பாடுகள் போன்ற செயற்பாடுகளுக்கு இணையம் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இந்த நல்ல விடயங்களைப் போலவே தீய விடயங்களும் உள்ளன. ஒரு பாதையில் சுற்றும் முற்றும் பார்க்காது பாதுகாப்பின்றி ஓடுவது எவ்வளவு ஆபத்தானதோ, அதே போன்று உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்தாமல் இணையத்தில் உலா வருவதும் ஆபத்தானதே. பாதுகாப்பு தொடர்பான தெளிவு பெற்றிருப்பது முக்கியமானது

> “ஏனையவர்களால் ஊகிக்க முடியாத வகையில் கடினமான ‘பாஸ்வேர்ட்கள்’ இடுதல் வேண்டும். எளிதாக நினைக்கக்கூடிய வார்த்தைகளை தவிர்த்து, எழுத்துக்கள், எண்கள், மற்றும் குறியீடுகளை கொண்ட பாஸ்வேர்ட்களை உருவாக்க வேண்டும். அடிக்கடி ‘பாஸ்வேர்ட்’களை மாற்றுதல் முக்கியமானது. பல தளங்களில் ஒரே ‘பாஸ்வேட்’டை பயன்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். அடிக்கடி ‘பாஸ்வேர்ட்’களை மாற்றுதல் முக்கியமானது

தொழில்நுட்ப வளர்ச்சியினால் இன்றைய உலகில் இணையத்தின் ஆதிக்கமே வியாபித்துக் காணப்படுகின்றது. இணையத்தின் ஊடாக பல நன்மையான விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, அதே அளவிற்கு தீமையான விடயங்களை மேற்கொள்வதற்கும் இணையம் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. வேலைவாய்ப்புக்கள், கல்வி, தொலைதொடர்பு, தகவல் பரிமாற்றம், பொழுதுபோக்கு, வணிகம் என்று அன்றாடத் தேவைகள் இன்று இணையத்திலேயே தங்கியுள்ளன. அதனால், இணையப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு வழங்க வேண்டியதன் தேவை காணப்படுகின்றது.

எனவே, காலத்தின் தேவைக்கு இந்த விடயங்களை வாசகர்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் இலங்கைப் பாராளுமன்றத்தில் ஊடக அதிகாரியாகக் கடமையாற்றும் நுஸ்கி முக்தார் அவர்களை நேர்காணல் செய்தோம். அதனை கேள்வி பதிலாக தருகின்றோம்.

**கேள்வி: இணைய பாதுகாப்பு என்றால் என்ன?**

இணையப் பாதுகாப்பு (Cybersecurity) என்பது இணையம் மற்றும் அதன் அடிப்படையிலான சேவைகள், மென்பொருட்கள் மற்றும் தரவுகளை பாதுகாக்கும் முயற்சிகளை குறிக்கிறது. இதனை வன்பொருள் (Hardware) பாதுகாப்பு மற்றும் மென்பொருள் (Software) பாதுகாப்பு என்ற வகையில், பிரித்துப் பார்க்க முடியும். இது கணினித் தொழில்நுட்ப உட்கட்டமைப்புடன் சார்ந்து வரும் விடயமாகும். குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்ற தொழில் வல்லுநர்கள் இதனை அறிந்துள்ளனர். சாதாரண பயனர்களான நாம் Cybersecurity என்பதை விடவும் Online Safety என்ற விடயம் தொடர்பில் கவனத்திற்கொள்ள வேண்டும். இது பயனர்களுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். அதற்கு கணினி சார்ந்த தொழில்நுட்பத்தின் ஆழ்ந்த அறிவு தேவையில்லை, குறிப்பாக இணையப் பாதுகாப்பு என்பது இணையத்தளங்களில் மற்றும் பிற கையடக்கத் தொலைபேசி செயலிகளில் தாக்குதல்களுக்கு உள்ளாகுவதிலிருந்து பாதுகாக்கும் முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கியது. ‘பாஸ்வேர்டுகள்’, உள்நுழைவுகளுக்கான இரண்டு நிலை அங்கீகாரம் (2FA) போன்றன இதில் அடங்கும். பயனர்கள் சார்ந்த இணையப் பாதுகாப்பு தொடர்பில் அதனைப் பயன்படுத்தும் அனைவரும் விழிப்புணர்வு பெறுவது கட்டாயமாகும். இதற்கு வயது வித்தியாசமோ, கல்வித்தகைமை வித்தியாசமோ இல்லை.

**கேள்வி: தற்போதைய சமூகத்தில் இணைய பாதுகாப்பு ஏன் அவசியமாகிறது?**

இன்றைய உலகில் இணையம் இன்றியமையாததாக மாறியுள்ளது. முன்னைய காலங்களில் சிந்திக்காத அளவுக்கு எமது பெரும்பாலான நடவடிக்கைகளை இணையத்தின் துணையுடனேயே செய்கின்றோம். இது எமது பணிகளை இலகுபடுத்தியுள்ளது. தகவல் பகிர்வு, பணப் பரிமாற்றம், கல்வி, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வணிக செயல்பாடுகள் போன்ற செயற்பாடுகளுக்கு இணையம் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இந்த நல்ல விடயங்களைப் போலவே தீய விடயங்களும் உள்ளன. ஒரு பாதையில் சுற்றும் முற்றும் பார்க்காது பாதுகாப்பின்றி ஓடுவது எவ்வளவு ஆபத்தானதோ, அதே போன்று உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்தாமல் இணையத்தில் உலா வருவதும் ஆபத்தானதே. பாதுகாப்பு தொடர்பான தெளிவு பெற்றிருப்பது முக்கியமானது. போலியான தகவல்கள், தனிப்பட்ட தகவல் திருட்டு, நிதி மோசடிகள், குற்றச் செயல்கள் என்பவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள இணையப் பாதுகாப்பு முக்கியமானது.

**கேள்வி: இணையத்தில் உள்ள பிரபலமான பாதுகாப்பு அச்சுறுத்தல்களை பற்றி கூற முடியுமா?**

இணைய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் பல உள்ளன. மால்வேர் (Malware), ஃபிஷிங் (Phishing), ரான்சம் வெயார் (Ransomware), DDoS தாக்குதல்கள், அடையாளத் திருட்டு (Identity Theft) போன்ற தொழில்நுட்பப் பதங்கள் ஊடாக அவற்றை அடையாளம்காண முடியும். சாதனங்களில் அழிப்பை ஏற்படுத்தல், பயனர்களை மாயம் செய்தல், தனிப்பட்ட தகவல்களை திருடுதல், மீட்பதற்குப் பணம் கோருதல், இணைய சேவைகளை தடுத்தல் மற்றும் அடையாள மோசடி என்பன பிரபல அச்சுறுத்தல்களாகும். சுருங்கக் கூறுவதானால், இவைகள் எந்தப் பெயர்களில் இனங்காணப்பட்டாலும், அடிப்படையில் பயனர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விடயமாகவே உள்ளன. பொதுவான இணையப் பயனர்கள் இந்த அச்சுறுத்தல்கள் தொடர்பில் அறிந்திருப்பது முக்கியமானது.

**கேள்வி: கடவுச்சொற்களை (பாஸ்வேர்ட்களை) பாதுகாப்பது எப்படி?**

ஏனையவர்களால் ஊகிக்க முடியாத வகையில் கடினமான ‘பாஸ்வேர்ட்கள்’ இடுதல் வேண்டும். எளிதாக நினைக்கக்கூடிய வார்த்தைகளை தவிர்த்து, எழுத்துக்கள், எண்கள், மற்றும் குறியீடுகளை கொண்ட பாஸ்வேர்ட்களை உருவாக்க வேண்டும். அடிக்கடி ‘பாஸ்வேர்ட்’களை மாற்றுதல் முக்கியமானது. பல தளங்களில் ஒரே ‘பாஸ்வேட்’டை பயன்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். பல ‘பாஸ்வேர்ட்’களை பயன்படுத்தும் போது, நம்பகமான ‘பாஸ்வேர்ட்’ முகாமை கருவிகளை பயன்படுத்த முடியும். இரண்டு நிலை அங்கீகாரத்தை (2FA) செயற்படுத்திக்கொள்வது கட்டாயமானதாகும். கடினமான பாஸ்வேர்டுக்கான உதாரணம்: Iwbo3N2000GSLB (I was born on 3rd November 2000 in Gampaha, Sri Lanka, Black) எனும் நீண்ட வசனத்தின் முதல் எழுத்துக்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

**கேள்வி: மோசடி முகவரிகளை அடையாளம் காண்பது எப்படி?**

முகவரியின் URL சரியானதா என உறுதி செய்து கொள்ளவேண்டும். மின்னஞ்சல் முகவரியோ இணையதள முகவரியோ தவறான அல்லது சந்தேகமானது எனின், அது மோசடியானது என்று கருதலாம். பயன்படுத்தியுள்ள படங்கள் அல்லது ‘லோகோக்கள்’ சந்தேகமானதாக இருந்தால் அது போலியானதாகும். உண்மையான படங்களைப் போன்றே சிறிய மாற்றங்கள் அவற்றில் காணப்படும். மின்னஞ்சல்கள் பெறப்படும் போது, இதற்கு முன்பு பெறப்பட்ட மின்னஞ்சல்களை ஒப்பிடுவதன் மூலம் உண்மையானதை அடையாளம் காணலாம். எழுதப்பட்டுள்ள விதம் சந்தேகமாக இருந்தால் அவை தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும். சந்தேகமாக இருந்தால் சம்பந்தப்பட்ட தரப்பினரை நேரடியாகவோ தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மின்னஞ்சல் முகவரியில் எழுத்துப்பிழைகள் இருக்குமானால், அவை மோசடி நடவடிக்கையாக இருக்க வாய்ப்புக்கள் உள்ளன.

**கேள்வி: உள்நுழைவுகளின் போது, இரண்டு நிலை அங்கீகாரத்தை (2FA) பயன்படுத்துவது ஏன் அவசியம்?**

இது கணக்குகளுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்குகின்றது. முதற்கட்ட ‘பாஸ்வேர்’டை செலுத்திய பின்னர், மீண்டும் பயனரை உறுதி செய்வதற்கான மேலதிக பாதுகாப்பு நடவடிக்கையைக் கொண்டுள்ளது. ‘பாஸ்வேர்ட்’களை ஏனையோர் அறிந்து கொண்டாலும், கணக்குகளுக்குள் ஊடுருவுவதற்கான சந்தர்ப்பத்தைக் தடுக்கின்றது. கையடக்கத் தொலைபேசிக்கோ மின்னஞ்சல் முகவரிக்கோ இதனை செயற்படுத்திக்கொள்ளலாம். புதிய ஒரு சாதனத்தில் கணக்கில் உள்நுழையும் போது, கையடக்கத் தொலைபேசிக்கு அல்லது மின்னஞ்சலுக்கு உள்நுழைவுக்கான இரகசிய இலக்கம் அனுப்பப்பட்டு, உள்நுழைவு உறுதிப்படுத்தப்படும். இதனால் கணக்குகள் திருடப்படுவது தவிர்க்கப்படுகின்றது.

**கேள்வி: நீங்கள் கடந்தகாலத்தில் சந்தித்த இணையப் பாதுகாப்பு தொடர்பான சவாலை பற்றி நமது வாசகர்களுக்கு கூற முடியுமா?**

எனக்கு நெருக்கமான ஒரு வைத்தியரின் பேஸ்புக் கணக்கு இனந்தெரியாத நபர்களால் முடக்கப்பட்டது. அவரது நண்பரின் கணக்கு முடக்கப்பட்டு அதன் ஊடாக வைத்தியரின் கணக்கை அணுகி அவரது கணக்கை இவ்வா று முடக்கியுள்ளனர். அதேபோன்று ஒரு பல்கலை க்கழக விரிவுரை யாளரின் பேஸ்புக் கணக்கும் முடக்கப்பட்டது. இவ்வகையான குற்றச்செயல்கள் பரவலாகக் காணப்படுகின்றன. அத்துடன், பண மோசடி சார்ந்த விடயங்களும் இடம்பெறுகின்றன. தனிப்பட்ட படங்களை வைத்து மிரட்டுதல், பணம் பறித்தல் என்பனவும் இடம்பெறுகின்றன. இந்தப் பாதுகாப்பு விடயங்களில் அவதானம் குறைவாக இருப்பதால் தான் இவ்வாறான மோசடிகளில் சிக்கிக்கொள்கிறோம். இணைய மோசடிகள் சம்பந்தமாக 20,000 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கடந்த 2023ஆம் ஆண்டில் இலங்கை கணினி அவசரகால தயார் நிலை குழுவில் (SLCERT) பதிவு செய்யப்பட்டுள்ளன.

**கேள்வி: தனிப்பட்ட தகவல்களை இணையத்தில் பகிரும் போது கருத்திற்கொள்ள வேண்டிய வியடங்கள் மற்றும் நடைமுறைகள் என்னவாக இருக்க வேண்டும்?**

கணினியினூடாக மேற்கொள்ளப்படும் சேவைகள் எமது தகவல்களை சேகரிப்பதற்கு காத்திருக்கின்றன. தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, புகைப்படம், கருத்துக்கள் மற்றும் வங்கித் தகவல்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். சமூக ஊடக நிறுவனங்கள், அவை வர்த்தக நோக்கங்களைக் கொண்ட நிறுவனங்களாகும். நாம் எந்தவித கட்டணமும் செலுத்தாமல் இலவசமாக பயன்படுத்தும் அதேவேளை, எமது தரவுகளை அந்தந்த நிறுவனங்கள் அவர்களது வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றன. இதனால் எமது தகவல்கள் மூன்றாம் தரப்பினருக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இணையத்தளங்களில், செயலிகளில் எமது தரவுகளைப் பாவிக்கும் விதம், சேமித்து வைத்துக்கொள்ளும் காலம் உள்ளிட்ட விபரங்கள் உள்ளடங்கிய தனியுரிமைக் கொள்கை (Privacy Policy) எனும் விடயம் உள்ளது. இணைய சேவைகளை பெரும் போது தனியுரிமைக் கொள்கையை வசித்து, அந்த சேவைகளை பயன்படுத்துவதா? இல்லையா என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

**கேள்வி: பொதுவாக இணையப் பயனர்கள் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளைக் குறிப்பிட முடியுமா?**


மென்பொருள் மற்றும் செயலிகளை புதுப்பிப்பது பல்வேறு பிழைகளை (bugs) மற்றும் கோளாறுகளைச் சரிசெய்து பாதுகாப்பை மேம்படுத்த உதவுகிறது. இது தரவுகளை பாதுகாக்க உதவுகிறது. எமது தரவுகளை வழங்கும் போது, நம்பகமான தளங்களுக்கு மாத்திரம் வழங்க வேண்டும். எமக்கு வருகின்ற அனைத்து விடயங்களுக்கும் பதிலளிப்பதிலிருந்து தவிர்ந்துகொள் வேண்டும். எமக்கு அவசியமான, நாம் சேவையைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் விடயங்களுக்கு மாத்திரம் பதிலளிப்பது பாதுகாப்பானது. பொது Wi-Fi சேவைகளில் தகவல்கள் திருடப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி வங்கிக் நடவடிக்கைகள் மேற்கொள்வதை தவிர்த்தல் வேண்டும். அத்துடன், எமது இணையத்தளப் பிரவேசம் தொடர்பில் விழிப்புடன் இருத்தல் வேண்டும். Internet Cafe சேவைகளை பயன்படுத்திய பின்னர், நாம் உள்நுழைந்த மின்னஞ்சல் மற்றும் ஏனைய இணையப் பக்கங்களிலிருந்து மறக்காமல் logout செய்ய வேண்டும்.


**கேள்வி: இணைய பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான உத்திகள் எவை?**

விழிப்புணர்வை அதிகரிக்க பயனர்களுக்கு அடிக்கடி தெளிவூட்டல்களை வழங்குவது முக்கியம். சிறிய பாதுகாப்பு உத்திகள் தொடர்பில் எப்பொழுதும் ஞாபகப்படுத்திக்கொண்டிருப்பது முக்கியமானது. பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை செய்ய வேண்டும். மாணவர்கள் மற்றும் சிறுவர்களின் இணைய பாவனை தொடர்பாக பெற்றோர்கள் அவதானமாக இருக்க வேண்டும். விழிப்புணர்வு நடவடிக்கைகள் இலகுவான மொழிநடையில், எவரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

இந்த நேர்காணலின் ஊடாக இணையப் பாதுகாப்பு தொடர்பான விளக்கத்தினை நீங்கள் பெற்றுக்கொண்டிருப்பீர்கள். இணைய மோசடிகள் காரணமாக இணையத்திலிருந்து ஒதுங்கிவிட முடியாது. இணைய அச்சுறுத்தல்களில் இருந்து தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகளையும், நடைமுறைகளையும் அறிந்திருப்பது டிஜிட்டல் யுகத்தின் அடிப்படையான விடயமாகும்.







# அரோகரா...

■ பு.கஜிந்தன்

இலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தின் 24ஆம் நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை (01) தேர் திருவிழா பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ வெகு விமர்சையாக நடைபெற்றது.

இவ் ஆலயத்தின் மூல மூர்த்திக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றதுடன், வசந்தமண்டப பூஜைகளும் இடம்பெற்றன.

அத்துடன், முருகப் பெருமான் உள் வீதியூடாக வலம் வந்து, தேரில் ஏறி வெளி வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் சூழ அரோகரா கோஷத்துடன் நல்லையம்பதியான் தேரேறி வலம் வந்த முருகப் பெருமானின் காட்சிகள் அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தது.


நல்லூர் கந்தனை தரிசிப்பதற்காக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பக்கர்கள் வருகை தந்திருந்தமையை காணக்கூடியதாக இருந்தது.

மேலும், இன்று திங்கட்கிழமை 2ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது.

















டாக்கா

பங்களாதேஷில் கனமழை;

# 59 பேர் பலி

பங்களாதேஷில் கடந்த 2 வாரங்களாக பெய்து வரும் கனமழையால் இதுவரை 59 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பங்களாதேஷில், கடந்த சில நாட்களாகவே கனமழை பெய்து வருகின்ற நிலையில், வெள்ள அனர்த்தங்களில் சிக்கி மக்கள் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில், பெனி மாவட்டத்தில் 23 பேரும், கமில்லா மாவட்டத்தில் 14 பேரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 11 மாவட்டங்களில் உள்ள நகராட்சி பகுதிகள் உட்பட பல்வேறு இடங்களில் 54 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அன்பார்

ஈராக்-அமெரிக்க படை தாக்குதில்

## 15 ஐ.எஸ். உறுப்பினர்கள் பலி

மேற்கு ஈராக்கில் உள்ள அன்பார் பாலைவனப் பகுதியில் பதுங்கியிருக்கும் ஐ.எஸ். உறுப்பினர்களை குறிவைத்து அமெரிக்கா மற்றும் ஈராக் இராணுவத்தின் கூட்டுப் படை கடந்த 29ஆம் திகதி வான்வழி தாக்குதல் நடத்தியதில், 15 ஐ.எஸ். உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 7 அமெரிக்க படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலின் போது, உறுப்பினர்கள் ஏராளமான ஆயுதங்கள், கையெறி குண்டுகள், வெடி பொருட்கள், தற்கொலை பெல்ட்கள் வைத்திருந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஈராக்கில் இருந்து அமெரிக்க படை முழுமையாக வாபஸ் பெற முடிவு செய்யப்பட்டாலும், அதற்கான கெடு இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. தற்போது 2,500 அமெரிக்க படையினர் ஈராக்கில் உள்ள தன்பார் இராணுவ தளத்தில் உள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்க படையினர் சமீபத்தில் நடத்திய தாக்குதலில் இம்முறைதான் அதிக ஐ.எஸ் உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வொஷிங்டன்

## ட்ரம்ப்பை சாடிய கமலா ஹாரிஸ்

'ட்ரம்ப் புனித பூமியை அரசியலாக்குகிறார்' என அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான கமலா ஹாரிஸ் கடுமையாக சாடியுள்ளார்.

போரில் உயிர் நீத்த வீரர்களின் கல்லறையான ஆர்லிங்டனுக்கு சென்ற அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அங்கு தேர்தல் பிரசாரம் செய்தார். இது அரசியல் வட்டாரங்களில் பெரும் விமர்சனத்தை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் கூறுகையில், "வீரர்கள் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடம், புனித பூமி. அங்கு எந்தவிதமான அரசியல் செயல்பாடுகளும் கூடாது என்று தடை உள்ளது. அப்படி இருந்தும் டிரம்ப் வேண்டும் என்றே அரசியல் செய்கிறார். இவர் தனது சுயநலத்திற்கு எதையும் செய்யக்கூடியவர்.

அமெரிக்க வீரர்களை கௌரவிக்க நாங்கள் ஒன்று கூடும் ஒரு புனிதமான இடம், ஆர்லிங்டன் கல்லறை. அது அரசியலுக்கான இடம் அல்ல. மயானம் என்பது அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கான இடம் அல்ல. எங்கள் வீரர்கள், இராணுவ குடும்பங்கள் கௌரவிக்கப்பட வேண்டும். ஒருபோது இழிவுபடுத்தப்படக் கூடாது" என அவர் தெரிவித்தார்.



திருவனந்தபுரம்

கேரள நடிகை சர்மிளா

## 'திடுக்' தகவல்



தன்னை இதுவரை பலர் பலாத்காரம் செய்ய முயன்றதாகவும், அவர்களிடமிருந்து பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தப்பித்து ஓடியதாகவும் கேரளாவைச் சேர்ந்த பிரபல நடிகை சர்மிளா திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக, இதுவரை 28 பேர் வரை 'அந்த' முயற்சியில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கேரள திரையுலகில் நடிகைகள் பலர் பலாத்கார பிரச்சினைகளால் பெரும் சிரமத்திற்குள்ளானதாக புகார் எழுந்துள்ளது. சில வழக்குகளும் பதியப்பட்டு விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், நடிகை சர்மிளா, பல திடுக்கிடும் சம்பவங்கள் குறித்து வெளிப்படையாக பேசியுள்ளார். அவர் கூறுகையில், "1997இல் 'அர்ஜுனாவும் அஞ்சு புள்ளைகளும்' என்ற திரைப்பட ஷூட்டிங்கில், இப்படத்தின் தயாரிப்பாளர் எம்.பி.மோகனன் மற்றும் அவரது நண்பர்கள் என்னை சூழ்ந்து பலாத்காரம் செய்ய முயற்சித்தனர். அதுபோல், ஒரு விடுதியில் தங்கி இருந்தபோது மோகனன் மற்றும் அவரது நண்பர்கள் என்னை பலாத்காரம் செய்ய வந்தனர். ஆனால், நான் தப்பித்து விட்டேன். இருப்பினும், ஏழை நடிகைகள் பலர் இது போன்ற தொல்லைகளில் இருந்து தப்புவது பெரும் சிரமம். வெளியே சொன்னால் அவமானம், எனது குடும்பத்தினருக்கு பாதிப்பு வரும் என்று அப்போது சொல்லவில்லை. இது போல் 28பேர் வரை 'அந்த' முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்" என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இது தொடர்பாகவும் கேரள பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

போபால்

கார்ட்டூன் பார்த்த சிறுவன்

## செல்போன் வெடித்து படுகாயம்

மத்திய பிரதேச மாநிலத்தில் செல்போன் வெடித்துச் சிதறியதில் 9 வயது சிறுவன் படுகாயமடைந்துள்ளார்.



சிந்த்வாரா மாவட்டத்தில் கல்கோட்டி திவாரி என்ற கிராமத்தில் வசிப்பவர் ஹர்த்யால் சிங். கூலித்தொழிலாளியான இவர், தமது மனைவியுடன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது, அவரது 9 வயது மகன் செல்போனை, சார்ஜ் போட்டபடியே தமது நண்பர்களுடன் கார்ட்டூன் பார்க்க ஆரம்பித்துள்ளார்.

கார்ட்டூனில் அவர் மூழ்கி இருக்க, திடீரென அந்த செல்போன் பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியுள்ளது. உடனடியாக சிறுவனை உள்ளூர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, அங்கு அவனை பரிசோதித்த மருத்துவர்கள் முதலுதவிக்கு பின்னர் சிந்த்வாரா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

உரிய சிகிச்சை அளித்த மருத்துவர்கள், சிறுவன் உடல்நிலை சீராக உள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும், கைகள், கால்களில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதால் தொடர் சிகிச்சை அவசியம் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

வதோதரா

## முதலைகளால் குஜராத்தில் பீதி

குஜராத்தின் வதோதராவில் வெள்ளத்தில் அடித்து வரப்பட்டு குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த 24 முதலைகளை வனத்துறையினர் மீட்டு ஆற்றுக்குள் விட்டனர்.

குஜராத் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகின்ற நிலையில், அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 28 பேர் உயிரிழந்துள்ளனர். 24 ஆறுகள் மற்றும் 137 நீர்த்தேக்கங்களில் வெள்ள அபாய அளவை தாண்டி வெள்ளம் பாய்ந்து வருகிறது.

அஜ்வா அணை நிரம்பியதைத் தொடர்ந்து அதில் இருந்து உபரி நீர் விஸ்வாமித்ரி ஆற்றில் திறந்து விடப்பட்டது.

440 முதலைகளுக்கு இந்த அணை புகலிடமாக இருந்த நிலையில், முதலைகள் பல வெள்ள நீரில் அடித்து வரப்பட்டு, வதோதரா நகரில் பல இடங்களில் உலாவத் துவங்கியுள்ளன.

இதனால், உடனடியாக களத்தில் இறங்கிய அதிகாரிகள் 24 முதலைகளை பிடித்து மீண்டும் விஸ்வாமித்ரி அணைக்குள் விட்டனர்.

அத்துடன், பாம்புகள், ராஜநாகங்கள், ஆமைகள் உள்ளிட்ட 75 உயிரினங்களும் குடியிருப்பு பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சோல்ட்டன் அணி வெற்றி

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் லெஜென்ஸ் காற்பந்தாட்ட கழகத்துக்கும், புத்தளம் சோல்ட்டன் காற்பந்தாட்ட கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான காற்பந்தாட்ட போட்டியில் சோல்ட்டன் அணி வெற்றி பெற்றிருக்கின்றது.



இந்த போட்டி புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் சனிக்கிழமை (31) மாலை இடம்பெற்றது.

புத்தளம் மன்னார் வீதி இரண்டாம் மைல் கல்லில் புதிதாக உதயமாகியுள்ள இந்த சோல்டன் காற்பந்தாட்ட கழகத்தின் முதலாவது போட்டியாக இந்த போட்டி அமைந்திருந்தது.

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இவர்கள் கலந்துகொண்ட முதலாவது போட்டி இதுவாகும்.

இந்த போட்டியில் வெற்றி பெற்றதன் மூலமாக தமது அணியின் வீரர்களுக்கு மேலும் உற்சாகமும், மன தைரியமும் ஏற்பட்டுள்ளதாகவும், கூடிய விரைவில் புத்தளம் காற்பந்தாட்ட லீக்கில் தம்மை பதிவு செய்து கொள்ள பிரயத்தனங்களை மேற்கொள்ள உள்ளதாகவும் இந்த அணியை வழி நடத்திய அணித்தலைவர் முஹம்மது இர்ஷாத் தெரிவித்தார்.

மேற்படி, இந்த போட்டியிலே சோல்டன் அணியோடு புத்தளம் நகரின் 40 வயதுக்கு மேற்பட்ட வீரர்களை கொண்ட லெஜென்ஸ் அணி போட்டியிட்டதில் சோல்டன் அணி 02 : 01 கோல்களினால் வெற்றி பெற்றது.

சோல்டன் அணிக்காக முஹம்மது ஜஹீன் 02 கோல்களையும், லெஜன்ட்ஸ் அணிக்காக எம்.ஏ.முஸ்தாக் 01 கோலினையும் பெற்றனர்.

போட்டிக்கு நடுவர்களாக எச்.எச்.ஹும்ருலைன், ஏ.ஏ.கியாஸ், எம்.எஸ்.எம்.நௌபி ஆகியோர் கடமையாற்றினர்.

சம்மாந்துறை விளையாட்டுக் கழகம்

## சம்பியன்

அஸ்ஹர் இப்றாஹிம்

சம்மாந்துறை கல்லரிச்சல் கிங்ஸ் லெவின் விளையாட்டுக் கழகம் நடாத்திய கிரிக்கெட் தொடரில் சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 14 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில், கிங்ஸ் லெவின் விளையாட்டுக் கழகத்தை வென்றே சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.



இத்தொடரின் நாயகனாக சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தின் ஜாபிர்கான் தெரிவானார்.

தேசிய கடற்கரை கபடி அணிக்கு

## நிந்தவூரிலிருந்து இருவர் தெரிவு

அஸ்ஹர் இப்றாஹிம்

ஈரானில் இவ்வாண்டு நடைபெறவுள்ள ஆண்களுக்கான முதலாவது உலகக் கிண்ண போட்டியில் கலந்து கொள்ளும் வகையில் இலங்கையின் தேசிய கடற்கரை கபடி அணிக்கு அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்திலிருந்து இலங்கை கடற்படை கபடி அணியைச் சேர்ந்த எ.ஜே.எம். ரிஸ்னி, ஏ.ஆர். ஜுமான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்விருவரும் நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் வீரர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## அத்லாண்டாவை வென்ற இன்டர் மிலன்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், இன்டர் மிலனின் மைதானத்தில் சனிக்கிழமை (31) நடைபெற்ற அத்லாண்டாவுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் அவ்வணி வென்றது.

இன்டர் சார்பாக, மார்க்கஸ் துராம் இரண்டு கோல்களையும், நிக்கொலோ பரெல்லா ஒரு கோலையும் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் ஆர்சனல்-பிறைட்டன் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், ஆர்சனலின் மைதானத்தில் சனிக்கிழமை (31) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியன் சமப்படுத்தியது.

இதேவேளை லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-1 என்ற கோல் கணக்கில் அஸ்டன் வில்லா வென்றதுடன், எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் போர்ண்மெத் வென்றது.

ஜேர்மனிய பண்டெஸ்லிகா தொடர்:

## லெவர்குசனை வென்ற லெய்ப்ஸிக்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பண்டெஸ்லிகா தொடரில், நடப்புச் சம்பியன்களான பயெர் லெவர்குசனின் மைதானத்தில் சனிக்கிழமை (31) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் ஆர்.பி. லெய்ப்ஸிக் வென்றது.

லெய்ப்ஸிக் சார்பாக லொய்ஸ் ஒபென்டா இரண்டு கோல்களையும், கெவின் கம்ப்ல் ஒரு கோலையும் பெற்றனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 02, செப்டெம்பர் 2024, இல.08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.